# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

குரல் 10 அதிர்வு 111 புரட்டாதி 2026 editor@ethiroli.com தொ.பே:1800 960 162

Budget Friendly
Home Improvements Pty Ltd
Quality
Renovation Work
0400 287 198










ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்


ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS
EASY • FAST • SAFETY
நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டிநொங்' இல்
புதியதோர் சேவை
BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank
Same day bank transfer
No One Beat Our Rate
THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175
(03) 87649143
0406409403
royalinfomoney@gmail.com

GRACE GROCERY
FRESH FINDS GREAT DEALS
INDIAN AND SRILANKAN

GRACE GROCERY

INDIAN AND SRILANKAN GROCERY

Our Current Location

Casey Central (Narre Warren) and Clyde North next to ALDI/Bunnings

Our New Locations Opening Soon

- Mambourin Shopping Centre (Mambourin) - 2025 / • Farm Gate Local (Clyde) - 2025
- Ramlegh Shopping Centre (Clyde) - 2025 / • Orana Shopping Centre (Clyde) - 2026

● சபீர் மொஹமட்




மண்ணுக்குள் புதைக்கப்படும் எதுவும் என்றென்றும் மறைந்து போவதில்லை என்பதை யாழ்ப்பாணத்தின் செம்மணிப் புதைகுழி மீண்டும் ஒருமுறை உலகிற்கு உரக்கச் சொல்லத் தொடங்கியிருக்கிறது. 26 ஆண்டுகளாக மௌனமாக இருந்த அந்த மண் மீண்டும் தனது ஆழமான அடுக்குகளிலிருந்து மனித சோகங்களின் சாட்சியங்களை ஒவ்வொன்றாக வெளியேற்றி வருகிறது.

இலங்கையின் தடயவியல் வரலாற்றில் இதுவரை கண்டறியப்பட்ட புதைகுழிகளிலேயே மிகப்பாரிய அளவிலானதாக அறிவிக்கப்பட்டிருக்கும் செம்மணி மனிதப் புதைகுழி, தற்போது தனது 3 ஆம் கட்ட அகழ்வாய்வை நிறைவேற்றியுள்ளது. ஆயினும், இந்த நிலம் தன் முழுமையான ரகசியங்களை இன்னும் வெளிப்படுத்தவில்லை.

அந்த வகையில், செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்று கட்டங்களாக 110 நாட்கள் முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப் பணிகளுக்காக சுமார் 57.9 மில்லியன் ரூபாய் (5 கோடியே 79,இலட்சத்து 68 ஆயிரம் ரூபா) செலவிடப்பட்டுள்ளதாக காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் தலைவர் ஓய்வுபெற்ற நீதிபதி மகேஷ் கட்டுலந்த தெரிவித்துள்ளார்.

செம்மணியில் இதுவரையில் முன்னெடுக்கப்பட்ட மூன்று கட்ட அகழ்வு பணிகளிலும் 584 என்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ள நிலையில், நான்காம் கட்ட அகழ்வுப் பணிகளுக்காக 14 நாட்களுக்கான பாதீட்டை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு, சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிராணவனுக்கு நீதிமன்று கட்டளையிட்டுள்ள நிலையில், பாதீடு சமர்ப்பிக்கப்பட்டதும்,



அதனை நீதி அமைச்சுக்கு மன்று சமர்ப்பித்து, நிதி ஒதுக்கீட்டை கோரவுள்ளது.

செம்மணி அகழ்வு பணிகளை முன்னெடுக்க போதிய நிதியினை ஒதுக்கீடு செய்வதற்கு அரசாங்கம் தயாராகவே உள்ளது என செம்மணி புதைகுழியை நேரில் பார்வையிட்ட நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார். அத்துடன், செம்மணி புதைகுழி தொடர்பில் நீதியான விசாரணைகளை முன்னெடுத்து, குற்றவாளிகளை தண்டிப்போம் என நீதி அமைச்சர் உறுதியும் அளித்துள்ளார்

மேலும் எழுமாறாக தோண்டப்பட்ட இரண்டு சோதனைக் குழிகளில் இருந்தும் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதனைத்தொடர்ந்து இந்த குறிப்பிட்ட எல்லைக்கு அப்பாலும் பல அடக்கங்கள் பரந்து கிடக்கின்றன என்பதை அது உறுதிப்படுத்துகின்றது.

## மண்ணடுக்குகள் சொல்லும் மௌனக் கதை

தொல்லியல் துறையின் சிரேஷ்ட பேராசிரியர் ராஜ் சோமதேவா, மருத்துவ-சட்ட விசாரணைக்காக சமர்ப்பித்துள்ள "Chemmani Mass Grave Excavation: A Proposed Road Map for the Continuation of the Medico-Legal Investigation" என்ற ஆய்வு அறிக்கை, இந்த நிலத்தின் புவியியல் அமைப்பையும் அதன் அதிர்ச்சியூட்டும் சில நிஜங்களையும் படம் பிடித்துக் காட்டுகிறது.

குறித்த அறிக்கையின்படி, அப்பகுதியில் ஐந்து தனித்துவமான மண் அடுக்குகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேற்பரப்பில் காணப்படும் இரண்டு அடுக்குகள் அண்மைய காலங்களில் அங்கே கொட்டப்பட்ட வீட்டுக் குப்பைகளைக் கொண்டிருக்க, அதற்கு கீழே யாழ்ப்பாணத்தின் இயல்பான புவியியல் அடுக்குகள் காணப்படுகின்றன. சுமார் 2 மீட்டர் ஆழத்திலுள்ள சுண்ணக்கல் படுகைக்கு மேலாக, 1.4 மீட்டர் ஆழத்திலேயே மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

## அடக்கங்களின் வகைகள்

இந்தப் புதைகுழியில் கண்டெடுக்கப்பட்ட எச்சங்கள், வழக்கமான இறுதிச்சடங்கு முறைகளுடன் புதைக்கப்பட்டவை அல்ல என்பதை தடயவியல் கவனிப்புகள் உணர்த்துகின்றன. சிதைக்கப்பட்ட உடற்பகுதிகள், பூரணமற்ற உடல் உறுப்புகளுடன் கூடிய எலும்புக்கூடுகள் மற்றும் ஆடைகளோ அல்லது தனிப்பட்ட பொருட்களோ இன்றி புதைக்கப்பட்ட உடல்கள் என வெவ்வேறு விதமான புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மேலும் குறித்த அறிக்கையில் சில "மிகை-யதார்த்த" கண்டுபிடிப்புகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எலும்புக்கூடு 467: Raincoat அணிவிக்கப்பட்ட ஒரு சிறுவனின் உடல், அதற்கு மேலே ஒரு குழந்தையின் Stroller வைக்கப்பட்டுள்ளது.

எலும்புக்கூடுகள் 227 மற்றும் 429: அமர்ந்த நிலையில், தியானக் கோலத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

பேராசிரியர் சோமதேவாவின் கூற்றுப்படி, இது ஒரே தருணத்தில் நிகழ்ந்த அடக்கம் அல்ல. பல்வேறு காலகட்டங்களில் பலவிதமான முறைகளில் நடத்தப்பட்ட ஒரு "சிக்கலான இறுதிச்சடங்குச் சூழல்" (Complex Funerary Context) இதுவாகும்.

செம்மணியில் கண்டெடுக்கப்படும் குழந்தைகளின் எச்சங்கள், இந்த அகழ்வாராய்ச்சியின் மிகவும் துயரமான ஒரு விடயமாகும். கடந்த ஆண்டு நீல நிறப் பள்ளிப் பை மற்றும் ஒரு பொம்மையுடன் சிறு குழந்தைகளின் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்ட நிலையில் தற்போது இரட்டையர்களைப் போன்ற ஒரே அளவிலான குழந்தைகளின் எச்சங்கள் ஜோடி ஜோடியாகக் கண்டறியப்பட்டு வருகின்றன. மேலும் தலைகள் துண்டிக்கப்பட்ட நிலையில், கைகள் பிணைக்கப்பட்ட நிலையில் உடல்கள் கண்டெடுக்கப்பட்டிருப்பது, அங்கு அரங்கேறிய கொடூரத்தின் அளவை வெளிப்படுத்துகிறது.



## நீதிக்கான கேள்வி

தற்போது மேற்கொள்ளப்பட்ட நிலத்தடி ரேடார் ஆய்வுகள், தற்போதைய அகழ்வு எல்லைக்கு அப்பாலும் 5 முதல் 10 மீட்டர் தொலைவிற்குள் மேலும் பல உடல்கள் புதைக்கப்பட்டிருப்பதை உறுதிசெய்துள்ளன

இதனைத் தொடர்ந்து, அறிவியல் காலக் கணிப்பு, தடய மானிடவியல் ஆய்வுகள் மற்றும் உயிரியல் விவரக் கணிப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய விரிவான வழிகாட்டி வரைபடத்தை பேராசிரியர் சோமதேவா முன்மொழிந்துள்ளார்.

இருப்பினும், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் சார்பாக வழக்காடும் வழக்கறிஞர் ரனித்தா ஞானராஜா "அறிவியல்பூர்வ முடிவுகளுக்காக மட்டுமே காத்திருக்காமல், ஏற்கனவே கிடைக்கக்கூடிய சாட்சியங்கள் மற்றும் பாதிக்கப்பட்டோர் வழங்கும் வாக்குமூலங்களை அடிப்படையாகக் கொண்டு இணையாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதுவே பாதிக்கப்பட்ட குடும்பங்களிடையே நம்பிக்கையை வளர்க்கும்." என்பதை வலியுறுத்துகின்றார்.



## மனிதநேயம் இன்னும் மரணிக்கவில்லை

கடந்த ஆண்டு, முதன்முறையாக, சிறு குழந்தைகளின் எலும்புக்கூடுகள் இந்த புதைகுழியில் கண்டெடுக்கப்பட்டன. அந்த நேரத்தில், களனியப் பல்கலைக்கழகத்தின் தொல்லியல்துறை முதுகலை மாணவர்கள் அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டிருந்தனர். அந்தச் சிறு குழந்தைகளின் எலும்புக்கூடுகளைத் தங்களின் கரங்களால் மெதுவாக மேலே தூக்கும் பொறுப்பு அவர்களுக்கு நேரிட்டது.

"ஐயோ... இவர்கள் சிறு குழந்தைகளே, ஏன் இவர்களுக்கு இந்த நிலை...?"

அந்தச் சிறிய எலும்புகளைக் கண்ட மாத்திரத்திலேயே, அந்த இளம் பெண்களால் தங்களின் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாமல் போனது. அவர்கள் அங்கேயே நின்று அழுதனர். இந்த ஆழமான உணர்வுபூர்வமான கதையை, இந்தப் புதைகுழி நிர்வகிப்புக் குழுவில் பணியாற்றும் ஒரு பெண் எங்களுடன் பகிர்ந்து கொண்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் மற்றும் தொல்லியல்துறை மாணவர்களுடன் இணைந்து, களனியப் பல்கலைக்கழக தொல்லியல்துறை மாணவர்களும் பேராசிரியர் ராஜ் சோமதேவாவின் தலைமையில் இந்த இடத்தில் இடைவிடாது பணியாற்றி வருகின்றனர். சிங்களவர் அல்லது தமிழர் என்ற எந்தவொரு பாகுபாட்டிற்கும் அப்பால் நின்று, இந்த பல்கலைக்கழக மாணவர்கள் கொளுத்தும் வெயிலிலும் கொட்டும் மழையிலும் அயராது இணைந்து செயல்படுகிறார்கள்.

பாதிக்கப்பட்ட குடும்பங்கள் சார்பாக வழக்காடும் வழக்கறிஞர் ரணிதாவிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது.

"தோண்டி எடுக்கப்பட்ட இந்த எலும்புகள் எங்கு சேமிக்கப்படுகின்றன? சாதாரண மக்களோ அல்லது ஊடகங்களோ சென்று அதைப் பார்க்க முடியாதா?"

அவரது பதில்,

"இங்குள்ள ஒவ்வொரு எலும்பும் ஒரு காலத்தில் வாழ்ந்த ஒரு மனிதனின் எச்சங்களுக்கு உரியது. அந்த மனிதர் இப்போது நம்மிடையே இல்லை என்றாலும், அவர்களின் உடற்பகுதிகளை நாம் மிகுந்த கண்ணியத்துடன் நடத்த வேண்டும். அதனால்தான், இந்த மனித உடல்கள் வைக்கப்பட்டுள்ள இடத்திற்கு நுழைய நீதிமன்றம் கூட மிகவும் வரையறுக்கப்பட்ட சிலருக்கு மட்டுமே அனுமதி அளிக்கின்றது."

ரனித்தா மற்றொரு விடயத்தை பகிர்ந்து கொண்டார்.

"...காலை முதல் இரவு இருட்டும் வரை இந்த மனிதப் புதைகுழிக்குள் வேலை செய்யும் பல்கலைக்கழக மாணவர்கள், இந்த எச்சங்களைப் பார்த்து 'எலும்புக்கூடு' அல்லது 'உடற்பகுதிகள்' என்ற சொற்களைப் பயன்படுத்துவதே இல்லை. மாறாக, அவர்கள் ஒவ்வொருவரையும் 'இந்த மனிதர்', 'அவர்' அல்லது 'அவள்' என்றே குறிப்பிடுகிறார்கள். இறந்தவர்கள் ஒவ்வொருவர் மீதும் அவர்கள் வைத்திருக்கும் ஆழமான மரியாதை அது..."

இருப்பினும், தமிழ் மக்கள் தங்கள் உறவினர்கள் மற்றும் குழந்தைகளின் எலும்புகளைப் பார்த்து சமூக ஊடகங்களில் தங்களின் துயரத்தைக் வெளிப்படுத்துகின்ற அதே நேரம், தென் இலங்கையை சேர்ந்த சிலர் அதே எலும்புக்கூடுகளைப் பார்த்து, "இதில் சூப் செய்து குடியுங்கள்" என்று கருத்து தெரிவிப்பதை நாம் தொடர்ந்தும் அவதானிக்கின்றோம். சில மனிதத்தன்மையற்ற நபர்கள் அந்தச் சிறு குழந்தைகளின் எலும்புக்கூடுகளின் புகைப்படங்களை எடுத்து, அவற்றை மீம்களாக உருவாக்கிச் சிரித்து வருகின்றனர்.

ஆனால் மறுபுறம், காலையிலிருந்து இரவு வரை சுட்டெரிக்கும் வெயிலிலும், கொட்டும் மழையிலும் நனைந்து, இந்த மாபெரும் சோகத்தின் உண்மையை வெளிச்சத்திற்கு கொண்டு வர இந்த இளம் மாணவர்கள் உழைத்து வருகின்றனர்.


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
LuckyJewelleryMelborne
luckysankaran@gmail.com
0387121974, 0415233284

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:08 அதிர்வு: 111 புரட்டாதி 2026 தொ.பே:1800 960 162

## தியாகத்தின் பேரொளியும் அலைவுறும் அரசியல் ஆன்மாவும்

கொள்கை என்பதன் மெய்ப்பொருளையும், அதற்காக ஒரு மனிதன் எந்ததளுவுதூரம் அதியுச்சமாக- உன்னதமாக- தன்னை ஈந்தளிக்க முடியும் என்பதையும் உலகிற்கு உணர்த்திச் சென்ற தியாகத்தின் முகவரி – தியாக தீபம் திலீபன். அவர் மறைந்து 39 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், தமிழின விடுதலைக்காக திலீபன் ஏற்றிவைத்த தியாகச் சுடரின் வெம்மையும் வெளிச்சமும் இன்றளவும் நம் அரசியல் வீதிகளில் எதிரொலித்துக் கொண்டே இருக்கின்றன. ஆயுதம் தாங்கிப் போர்க்களத்தில் வீழ்வதை விடவும், ஒரு சொட்டு நீரும் அருந்தாது தன் உடலையே உருக்கி உயிரைத் துறப்பது தியாகத்தின் உச்சம். திலீபனுக்குப் பிறகு தமிழினத்துக்காக அத்தகையதொரு இணையற்ற அர்ப்பணிப்பை வேறு எவரும் செய்யவில்லை என்பதை வரலாறு என்றென்றும் பதிவு செய்யும்.

தமிழ் இனத்தின் காவல் தெய்வங்களில் ஒருவரான திலீபன் எதற்காக உண்ணாநோன்பிருந்து மடிந்தானோ, அந்த லட்சியக் கனவுகள் இன்னும் முழுமையாக அடையப் படவில்லை என்பது மறுக்க முடியாத கசப்பான உண்மை யாகும். ஆண்டுதோறும் அவருக்கு நினைவேந்தல்களையும் அஞ்சலிகளையும் அரசியல் அமைப்புகளும் தலைவர்களும் அரங்கேற்றினாலும், இலட்சியத்தை நோக்கிய பயணத்தில் நாம் எந்த அளவிற்குத் துணிவுடனும் நேர்மையுடனும் நகர்ந்திருக்கிறோம் என்பதற்குக் ‘காலம் நகர்ந்தும் தீர்வு கிடைக்கவில்லை’ என்ற சுடும் நிஜமே சான்றாக நிற்கிறது. நினைவேந்தல் நிகழ்வுகள் நிச்சயம் செய்யப்பட வேண்டி யவையே. ஆனால், எதற்காக அந்த மகத்தான தியாகம் விதைக்கப்பட்டதோ, அதிலிருந்து நாம் அறுவடை செய்தது என்ன? அதை அடைவதற்கு நாம் நேர்மையுடன் முற்பட் டுள்ளோமா? என்பதை சுயபரிசீலனை செய்யத் தவறினால், அது அந்த உன்னதமான தியாகத்திற்கு நாம் இழைக்கும் வரலாற்றுத் துரோகமாகவே முடியும்.

1987 செப்ரெம்பர் 15 அன்று, நல்லூர் வீதியில் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, நீராகாரம் கூட அருந்தாத அறப்போராட்டத்தைத் தொடங்கிய திலீபன், 12 நாட்கள் தாகத்தில் வெந்து செப்ரெம்பர் 26 அன்று தன் இன்னுயிரை ஈந்தார். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதான அரசியல் கைதிகளின் விடுதலை, தாயக நிலங்களில் சிங்களக் குடியேற்றங்களை நிறுத்துதல், புதிதாக அமைக்கப்பட்ட பொலிஸ் முகாம்களின் செயற்பாடுகளை முடக்குதல், ஊர்காவல் படையினரிடம் உள்ள ஆயுதங்களைக் களைதல் மற்றும் இராணுவ விரிவாக்கத்தைத் தடுத்தல் ஆகிய அந்த ஐந்து அம்சக் கோரிக்கைகளும் பல தசாப்தங்கள் கடந்தும் தமிழர் வாழ்வில் தீர்க்கப்படாத வினாக்களாகவே நீடிக்கின்றன.

ஆட்சிகள் மாறினாலும் காட்சிகளும் மனநிலைகளும் மாறவில்லை என்பதையே இன்றைய நிலைவரங்கள் உணர்த்துகின்றன. பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படுவதாகக் கூறப்பட்டாலும், அதற்கு மாற்றாக மற்றொரு அடக்குமுறைச் சட்டத்தைக் கொண்டுவரவே அரசுகள் முயல்கின்றன. தொல்லியல் திணைக்களம் போன்ற அரச நிறுவனங்கள் இன்னமும் பேரினவாதக் கண்ணோட்டத் துடனேயே தமிழர் நிலங்களை ஆக்கிரமித்து வருகின்றன. திலீபன் வலியுறுத்திய உரிமைகளும் பாதுகாப்பும் சட்டரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் உறுதி செய்யப்படுவதே அவர் ஆற்றிய தியாகத்திற்கு நாம் செலுத்தும் உண்மையான கௌரவமாகும்.

இதற்காக, பிளவுபட்டு நிற்கும் தமிழ்க் கட்சிகள் தம் குறுகிய சுயநலன்களைத் துறந்து, அடிப்படை விடுதலைக்காகப் பொதுவெளியில் கரம் கோர்க்க வேண்டும். தமிழ் மக்களும் சந்தர்ப்பவாத அரசியல் அலைகளில் அடித்துச் செல்லப்படாமல், தகுதியற்றவர்களை நிராகரித்து, கொள்கை வழியில் நின்று வாக்களிக்க வேண்டும். வெறும் உணர்ச்சிப் பெருக்கைத் தாண்டி, லட்சியத்தை அடையும் கூரிய அரசியல் பார்வையை முன்னெடுப்பதே, தியாக தீபத்திற்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகவும், வரலாற்றின் கடமையாகவும் அமையும்.

# முழு ஆஸ்திரேலியாவே உற்றுநோக்கும் 2026 விக்டோரியா மாநிலத் தேர்தல்:
# எந்தக் கட்சி ஆட்சியைத் தக்க வைக்கும்?






ஒரு அலசல்

● சபா.தயாபரன்

ஆஸ்திரேலியாவின் விக்டோரியா மாநிலத்தின் 61-ஆவது நாடாளுமன்றத்திற்கான தேர்தல் விக்டோரியாத் தேர்தல் சட்டம் 2002 இன்படி 2026 நவம்பர் 28 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. இதில் கீழவையான சட்டமன்றம் (Legislative Assembly) 88 இடங்களுக்கான 88 உறுப்பினர்களைக் கொண்டது. இங்குதான் சட்டங்கள் இயற்றப்படுகின்றன மற்றும் மாநில வரவு -செலவுத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. ஒரு அரசாங்கத்தின் தலைவரான முதலமைச்சர், இந்தச் சபையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

மேலவையான சட்டமன்றம் (கீழ் சபை) சட்ட மேலவை யின் (Legislative Council) 40 இடங்களுக்கும் வாக்குப்பதிவு நடைபெறும். சட்டமன்ற மேலவை 40 உறுப்பினர்களைக் கொண்டது. சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டங் கள் இங்குதான் ஆய்வு செய்யப்படுகின்றன. அரசாங்கம் முடிவெடுப்பதில் இரு அவைகளுக்கும் முக்கியமான பங்கு இருப்பதால், இரு அவைகளிலும் வேட்பாளர்களுக்கு வாக்களிப்பது அவசியமாகும். புதிய சட்டங்கள் இயற்றப்படுவதற்கு முன்பு இரு அவைகளும் ஒப்புக்கொள்ள வேண்டும்.

இந்தத் தேர்தல் விக்டோரியா மாநில அரசை மட்டு மல்லாமல், ஒட்டுமொத்த ஆஸ்திரேலியாவின் அரசியல் போக்கை மாற்றி தேசிய அளவில் பல அதிர்வுகளை ஏற்படுத்த லாம் என்பதால் ஆஸ்திரேலிய அரசுக்கு மிகவும் முக்கியத் துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

இத் தேர்தலில் களமிறங்கவுள்ள பிரதான கட்சிகள் என்று குறிப்பிடுகையில்,

ஆஸ்திரேலிய தொழிலாளர் கட்சி - விக்டோரியாக் கிளை (Australian Labor Party - ALP) மாநிலத்தின் ஆளுங் கட்சி.

முதன்மை எதிர்க்கட்சியான லிபரல் - நஷனல் கூட்டணி (Liberal-National Coalition)

கிராமப்புறங்களை மையமாகக் கொண்ட நஷனல் கட்சி ஆகியவற்றின் கூட்டணி.

ஆஸ்திரேலியப் பசுமைக் கட்சி .

விக்டோரியா (Australian Greens Victoria): சுற்றுச்சூழல் மற்றும் இடதுசாரிக் கொள்கைகளைக் கொண்ட கட்சி.

ஒன் நேஷன் விக்டோரியா (One Nation Victoria): பவுலின் ஹான்சன் தலைமையிலான வலதுசாரிக் கட்சி.

விக்டோரியன் சோசலிஸ்டுகள் (Victorian Socialists), லிபர்ட்டேரியன் கட்சி, Family First Victoria, ஜனநாயக தொழிலாளர் கட்சி DLP [Democratic Labour Party] போன்ற சிறு கட்சிகளும் களத்தில் உள்ளன.

விக்டோரியாவின் மிகச் சமீபத்திய கருத்துக் கணிப்புகள் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக ஆஸ்திரேலிய அரசியல் உலகில் ஜாம்பவானாக ஆதிக்கம் செலுத்தி வரும் இரண்டு முக்கியமான கட்சிகளான தொழிலாளர் கட்சி மற்றும் கூட்டணிக் கட்சி என்பன, அண்மைக்காலமாக ஆஸ்திரேலிய அரசில் அமோக ஆதரவைப் பெற்று வரும் வன் நேசன் (One Nation) கட்சியின் எழுச்சியினால் தமக்கான ஆதரவு பிளவுபட்டு நிற்பதை வெளிப்படுத்து கின்றன.

ஒரு சில சிறிய கட்சிகள் தோன்றி மறைந்து போனாலும் பசுமைக் கட்சி தன் இருப்பை ஸ்திரநிலையில் தக்க வைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக DLP [Democratic Labour Party] மற்றும் ஆஸ்திரேலிய ஜனநாயகக்கட்சி (Austrralian Democrats) போன்ற முக்கியமான சிறிய கட்சிகளினால் இளைய தலைமுறைக்கு ஏற்றதான ஒரு அரசியல் தளத்தை அமைப்பதில் தவறிய நிலையில் அவை பின்னடைவைச் சந்தித்தன.

இதுவரை ஆஸ்திரேலிய ஆட்சியைத் தீர்மானிக்கும் இரு பெரிய கட்சிகளான தொழிலாளர் கட்சி மற்றும் கூட்டணிக் கட்சிகளின் அத்திபாரத்தை தகர்த்தெறியுமளவிற்கு எந்த ஒரு கட்சியும் உருவாகவில்லை. ஆனால் சமீபகாலமாக ஆஸ்திரேலிய அரசியலில் சில அதிர்வுகளை ஏற்படுத்தி வரும் வன் நேசன் கட்சி அதிக முதன்மை வாக்குகளைப் பெற்றுள்ளதாக கருத்துக்கணிப்புகள் தெரிவித்துள்ள நிலையில் இரு பெரிய கட்சிகளுக்கும் இது கலக்கத்தை அளித்துள்ளது.

இப்போது எழுந்துள்ள கேள்வி என்னவென்றால், வன் நேசனின் (One Nation )எழுச்சியின் தாக்கம் கூட்டணிக் கட்சியின் வியூகத்தை உடைத்து இரண்டும் நெருங்கி கைகோர்த்து ஒரு புதிய கூட்டணியை உருவாக்குமா என்பதே.

கடந்த ஜூலை மாதம் விக்டோரிய பிரிமியர் ஜசிந்தா ஆலனுக்குப் (Jacinda Allen) பதிலாக பென் கரோல் (Ben Carroll) புதிய பிரீமியராக பொறுப்பேற்ற போதிலும், ஆளும் தொழிலாளர் கட்சி பின்னடைவைச் சந்தித்து வருகிறது. பிரீமியரை மாற்றியும் தொழிலாளர் கட்சியால் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை என 46% வாக்காளர்கள் கருதுகின்றனர்.

தற்போதைய நிலைவரப்படி லிபரல்-நஷனல் கூட்டணி முன்னிலையில் உள்ளதாக கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின் றன. அதே நேரத்தில் வன் நேஷன் கட்சியின் வாக்குகள் அதிகரித்து வருவதால் தொழிலாளர் கட்சி மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் 5-7, 2026 அன்று ராய் மோர்கன் கருத்துக்கணிப் பில் (Roy Morgan Research) இரு கட்சி விருப்பு வாக்குகள் (Two-Party Preferred) அடிப்படையில், லிபரல்-நஷனல்

(07ஆம் பக்கம் பார்க்க)

## வாசகர் களம்

எதிரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர் களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துகள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி

ஆசிரியர்பீடம், எதிரொலி



editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175

# முழு ஆஸ்திரேலியாவே உற்றுநோக்கும் 2026 விக்டோரியா மாநிலத் தேர்தல்: எந்தக் கட்சி ஆட்சியைத் தக்க வைக்கும்?

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டணி 51%, தொழிலாளர் கட்சி 49% என்ற நிலையில் உள்ளன.

முதன்மை வாக்குகள் (Primary Vote) இரு பெரும் கட்சிகளுக்கும் தலா 26% ஆக இருக்க, வன் நேஷன் கட்சி 23.5% வாக்குகளைப் பெற்றுள்ளது.

அதே சமயம் ஒகஸ்ட் 9-15, 2026 அன்று நடந்த ரிசோல்வ் கருத்துக்கணிப்பில் (Resolve Poll - The Age) - கூட்டணி 53%, தொழிலாளர் கட்சி 47%. தொழிலாளர் கட்சியின் முதன்மை வாக்கு வங்கி 25% ஆக குறைந்துள்ளது.

லிபரல் கட்சித் தலைவர் ஜெஸ் வில்சன் (Jess Wilson) இன் மக்கள் செல்வாக்கு +18% ஆக உயர்ந்துள்ளது.

ரெட்பிரிட்ஜ் ரூ டெமோஸ்ஏயு கணிப்புகள் (Red-Bridge & DemosAU Polls) - ஒகஸ்ட் 2026 கணிப்பில் கூட்டணி 57%, தொழிலாளர் கட்சி 43% என மிகப் பெரிய இடைவெளி காட்டப்பட்டுள்ளது.

### வெற்றியை நிர்ணயிக்கும் காரணிகள்

வன் நேஷன் கட்சியின் வாக்குகள் இம்முறை 20%க்கும் அதிகமான முதன்மை வாக்குகளைப் பெற்று வலுவாக உருவெடுத்துள்ளது.வன் நேஷன் கட்சியின் இரண்டாவது விருப்ப வாக்குகள் (Preferences) கூட்டணி ஆட்சியை அமைக்க முக்கியமான பங்கு வகிக்கலாம்.

மொத்தமான கருத்துக் கணிப்புகளின் அடிப்படையில் நவம்பர் 28 அன்று நடைபெறவுள்ள விக்டோரியா மாநிலத் தேர்தலில் ஒரு தொங்கு நாடாளுமன்றம் (Hung Parliament) அமைவதற்கோ அல்லது கூட்டணி ஆட்சி ஏற்படுவதற்கோ அதிக வாய்ப்புகள் இருப்பதாகப் பல தேர்தல் கணிப்புகள் தெரிவிக்கின்றன

விக்டோரியா அரசியல் வரலாற்றில் வழக்கமாக ஆளும் லேபர் கட்சி (Labor) மற்றும் லிபரல்-நஷனல் கூட்டணி (Coalition) இடையேதான் நேரடிப் போட்டி இருக்கும். ஆனால், இந்த ஆண்டு வன் நேஷன் (One Nation) கட்சியின் செல்வாக்கு கணிசமாக உயர்ந்துள்ளது.

ராய் மார்கன் (Roy Morgan) மற்றும் ரெட்பிரிட்ஜ் (Red-bridge) போன்ற முன்னணி நிறுவனங்களின் சமீபத்திய கருத்துக்கணிப்புகள், எந்த ஒரு முக்கியமான கட்சிக்கும் ஆட்சி அமைக்கத் தேவையான தனிப்பெரும்பான்மை (88 இடங்களில் 45 இடங்கள்) கிடைக்காது என்பதைக் காட்டுகின்றன.

தேர்தல் முடிவுகளில் யாருக்கும் பெரும்பான்மை கிடைக்காத பட்சத்தில், வன் நேஷன் (One Nation ) கட்சி அல்லது கிரீன்ஸ் (Greens) மற்றும் சுயேச்சைகளின் ஆதரவோடுதான் லேபர் கட்சியோ அல்லது லிபரல் கூட்டணியோ சிறுபான்மை அரசாங்கத்தை (Minority Government) அமைக்க முடியும்.

எனவே, வாக்காளர்களின் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்ட விருப்பத்தேர்வு வாக்குகள் இந்தத் தேர்தலில் ஆட்சியைத் தீர்மானிப்பதில் மிக முக்கியமான பங்கு வகிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### தேவிக்டோரியாத் தேர்தலும் தமிழ் மக்களின் பங்களிப்பும்

ஆஸ்திரேலியாவின் விக்டோரியா மாநிலத்தில் அதிவேகமாக வளர்ந்து வரும் தெற்காசிய சமூகங்களில் தமிழர்களும் ஒரு பிரதான அங்கமாக இருக்கின்றனர். இந்தத் தேர்தலில் தமிழ் வாக்காளர்களின் எண்ணிக்கை 25% க்கும் அதிகமாக இருப்பதாக ஆஸ்திரேலிய புள்ளிவிவரப் பணியகத்தின் (ABS) மக்கள் தொகை கணக்கெடுப்புத்தரவுகள் தெரிவிக்கின்றன.

அண்மைக்காலமாக இங்கு வெற்றி ,தோல்வியைத் தீர்மானிக்கும் மிக முக்கியமான அரசியல் சக்தியாகவும், தேர்தல் முடிவுகளைத் தீர்மானிக்கும் காரணியாகவும் தமிழ்மக்கள் உருவெடுத்துள்ளனர்.

விக்டோரியாவின் முக்கியமான அரசியல் கட்சிகள் தமிழ் மற்றும் பன்முகக் கலாசார வாக்காளர்களைக் கவர பல்வேறு உத்திகளைக் கையாண்டு வருகின்றன

விக்டோரியா (ஆஸ்திரேலியா) மாநிலத் தேர்தலில் தமிழ் மக்களின் நிலைப்பாடு மற்றும் வாக்குப்பதிவு போக்குகள், பொதுவாகப் பலதரப்பட்ட சமூக, பொருளாதார மற்றும் அரசியல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. தங்களின் தனிப்பட்ட முன்னுரிமைகளின் அடிப்படையிலேயே மக்கள் வாக்களித்து வருகின்றனர்.

### தமிழ் மக்களின் தேர்தல் நிலைப்பாட்டை தீர்மானிக்கும் முக்கிய காரணிகள்

குடிவரவுக் கொள்கைகள் மற்றும் அகதிகளாகவும் புகலிடக் கோரிக்கையாளர்களாகவும் வந்துள்ள தமிழ் மக்களுக்கு ஆதரவான கொள்கைகள் தமிழ் வாக்காளர்களிடையே பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

அகதிகள் உரிமைகளுக்காகப் போராடும் தமிழ் அகதிகள் கவுன்சில் (Tamil Refugee Council) போன்ற அமைப்புகளின் செயற்பாடுகள் மற்றும் சோசலிசக் கட்சிகளின் (Victorian Socialists) மனிதநேயக் கொள்கைகள் தமிழ் மக்களால் குறிப்பாக இலங்கைத் தமிழர்களால் பெரிதும் ஈர்க்கப்பட்டு வரவேற்கப்படுவதாக அண்மைக்கால செயற்பாடுகள் வெளிக்காட்டுகின்றன.

விக்டோரியாவின் பன்முகத்தன்மை ((Multiculture) கொண்ட சமூக அமைப்பிற்கு மதிப்பளிக்கும் கட்சிகளைத் தமிழ் மக்கள் ஆதரிக்கின்றனர். இனவாதக் கொள்கைகள் அல்லது குடியேற்றவாசிகளுக்கு எதிரான கருத்துகளைக் கொண்ட தீவிர வலதுசாரிக் கட்சிகளை (உதாரணமாக, One Nation) பொதுவாகத் தமிழ் மக்கள் தவிர்த்து வருகின்றனர் என்பதே நிதர்சனம்.

எத்னிக் கம்யூனிட்டீஸ் கவுன்சில் ஓஃப் விக்டோரியா )Ethinic Communities Council of Victoriya )போன்ற அமைப்புகள் முன்வைக்கும் பன்முக கலாசாரக் கல்வி, இனவாத எதிர்ப்பு போன்ற கோரிக்கைகளைத் தமிழ் மக்களும் ஆதரிக்கின்றனர்.

பல்வேறு புலம்பெயர்ந்த சமூகங்களைப் போலவே, நடுத்தர வர்க்கத் தமிழ் மக்களின் வாக்குகள் தற்போதைய பொருளாதாரச் சூழலைச் சார்ந்தே அமைகின்றன.

வீட்டு வசதி மற்றும் சுகாதாரம்: மலிவு விலை வீடுகள், வாடகை மற்றும் சிறந்த மருத்துவ வசதிகளை வழங்கும் கட்சிகளுக்கு தமிழ் சமூகத்தினால் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

வாழ்வாதாரச் செலவினங்கள் (Living expenses) அதிகரித்துவரும் பணவீக்கம், அன்றாட வாழ்க்கைச் செலவுகள் போன்றவற்றை எதிர்கொள்ள உதவும் பொருளாதாரக் கொள்கைகளை வாக்காளர்கள் கூர்ந்து கவனிக்கின்றனர்.

தொழிலாளர் கட்சி (Labor) யின் பாரம்பரியமாக, பன்முக கலாசாரம் மற்றும் குடியேற்றவாசிகள் மீதான மென்மையான அணுகுமுறை காரணமாகப் பெரும்பாலான புலம்பெயர்ந்த சமூகங்கள் தொழிலாளர் கட்சிக்கு ஆதரவாகவே பெரும்பாலும் செயற்பட்டு வந்துள்ளன.

கூட்டணிக் கட்சிகளைப் பொறுத்த வரை (Liberal/National Coalition) தொழில்முனைவோர், சிறு வணிகர்கள் மற்றும் பொருளாதார ரீதியாக நிலையான கொள்கைகளை எதிர்பார்ப்போர் லிபரல் / நஷனல் கூட்டணியை ஆதரிக்கும் போக்கும் கடந்த காலங்களில் அதிகரித்து வந்துள்ளது.

### உள்ளூர் தொகுதி வாரியான வேறுபாடுகள்

மெல்பேர்னின் தென்கிழக்கு மற்றும் மேற்குப் புறநகர்ப் பகுதிகளில் (உதாரணமாக: Dandenong, Werribee,Tarneit, Craigieburn) கணிசமான அளவில் தமிழ் மக்கள் வசிக்கின்றனர். இந்தத் தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களின் தனிப்பட்ட தகுதிகள், அவர்கள் உள்ளூர் சமூகத்துடன் வைத்துள்ள நெருக்கம் மற்றும் தமிழ் மொழிப் பள்ளிகள், வழிபாட்டுத் தலங்களுக்கு அவர்கள் வழங்கும் ஆதரவு ஆகியவை வாக்குகளைத் தீர்மானிப்பதில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

பொதுவாக விக்டோரியாத் தேர்தலில் தமிழ் மக்களின் நிலைப்பாடு என்பது பன்முக கலாசாரப் பாதுகாப்பு, அகதிகள் நலன், குடியேற்றக் கொள்கை மற்றும் வாழ்வாதாரப் பொருளாதாரக் கொள்கைகளை மையமாக வைத்தே தீர்மானிக்கப்படுகிறது.

விக்டோரியாவில் தமிழ் மக்கள் அதிகமாக வாழும் மொனாஷ் (Monash) மற்றும் கிளென் வேவர்லி (Glen Waverley): கிளென் வேவர்லி தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மிக அதிகபட்சமாக 3.0% மக்கள் வீட்டில் தமிழ் பேசுபவர்களாக உள்ளனர். மேலும் கிளேட்டன் (1.8%), மல்கிரேவ் (1.6%) மௌன்ற் வேவர்லி 1.5% (Mount Waverley) வீலர்ஸ் ஹில்ஸ் 1.3%(Wheelers Hill ) ஆகிய பகுதிகளிலும் தமிழ் மக்கள் பரவலாக வாழ்கின்றனர்.

மேற்கு மெல்பேர்ன் (Western Melbourne): பாம்பூரின் (Mambourin - 8.7%) மற்றும் மேனர் லேக்ஸ் (Manor Lakes - 3.2%) ஆகிய பகுதிகளில் அண்மைக் காலங்களில் தமிழ் பேசும் மக்களின் எண்ணிக்கை பெருமளவில் உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தென்கிழக்கு மெல்போர்ன் (South-East Melbourne): பேக்கன்ஹாம் சவுத் (Pakenham South): 6.8% , டோவ்டன் (Doveton) 6.2%, மற்றும் டான்டினாங் (Dandenong) 5.0% போன்ற பகுதிகளிலும் கணிசமான எண்ணிக்கையில் தமிழ் மக்கள் வசிக்கின்றனர் .

ஒட்டு மொத்தமாக விக்டோரியத் தேர்தல் முடிவுகளை கருத்துக் கணிப்புகளின் அடிப்படையில் முன்கூட்டியே உறுதியாகக் கூற முடியாது. அது ஒரு குறியீடு மட்டுமே.

தேர்தலின் இறுதி நேரத்தில் மக்களின் மனநிலை மாறலாம் அரசியல் கொள்கைகளும் தேர்தல் வாக்குறுதிகளும் அந்த மாற்றத்திற்கு காரணமாகலாம். மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்பதைப் போல மக்கள் தீர்ப்பே இறுதியானது!

ஆஸ்திரேலியாவின் பலம் அதன் அடையாளம் பன்முகக் கலாசாரத்தில் தங்கி இருக்கிறது. பல்வேறு இனங்கள், மதங்கள், மொழிகள் மற்றும் பண்பாடுகளைச் சேர்ந்த மக்கள் ஒற்றுமையுடன் வாழும் இந்த நாட்டில், ஒவ்வொரு சமூகத்தின் கலை, கலாசாரம் மற்றும் விழுமியங்களையும் வழமைபோல மதிக்கும் ஆட்சியே தேவை.

இன, மத, மொழி வேறுபாடுகளைக் கடந்து அனைவருக்கும் சம உரிமையும் சம வாய்ப்பும் வழங்கும் ஆட்சியை மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

அந்த எதிர்பார்ப்பையும், நல்லிணக்கமான எதிர்காலத்துக்கான மக்களின் விருப்பத்தையும் பிரதிபலிக்கும் வகையிலேயே விக்டோரியாத் தேர்தல் முடிவுகள் அமைய வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பும் பிரார்த்தனையும் ஆகும்.

இறுதியில் வெற்றியைத் தீர்மானிப்பது கருத்துக் கணிப்புகள் அல்ல - மக்கள் வாக்குகளே!

நல்ல விடியலுக்காக காத்திருப்போம்.



# ஈழத் தமிழ்ச் சமூகம்: மீட்புக்கான வழிகளைக் கண்டறிவது எப்படி?



● கருணாகரன்

எரியும் பிரச்சினைகளில் ஒன்றான காணாமலாக்கப்பட்டோரின் விவகாரத்தைக் கூட எப்படிக் கையாள்வது என்று தெரியாத ஒரு நிலைக்குத் தமிழ்ச் சமூகம் தள்ளப்பட்டுள்ளது. ஆனால், இந்த விவகாரம் தமிழ் மக்களுடைய விடுதலைக்கு நல் வாய்ப்பை அளிக்கக் கூடிய ஒரு சிறந்த கதவாகும். அதைச் சரியாகக் கையாளத் தவறியதால் இன்று இதுவும் ஒரு பெரும் பின்னடைவாகவும் தோல்வியாகவும் மாறியுள்ளது. என்பதால் இதுவும் துயரத்தையே தந்துள்ளது. எனவே, தமிழ்ச் சமூகம் தன்னுடைய விடுதலைக்கான போராட்டத்தில் தொடர்ந்தும் தோற்றுக் கொண்டேயிருக்கின்றது.

தமிழ்ச் சமூகத்தின் மீதான ஒடுக்குமுறைக்கும், இன அழிப்புக்கும் ஆதாரமாக இருக்கும் விடயங்களில் காணாமலாக்கப்பட்டோர் விடயமும் ஒன்று. அதுவும் செம்மணியில் மனிதப் புதைகுழிகளைத் தோண்டும் நடவடிக்கையில் 500 க்கு மேற்பட்ட மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டிருக்கின்ற இந்தச் சூழலில், இந்த விவகாரத்தைச் சரியாகக் கையாண்டு, இலங்கை அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியிருக்க முடியும்.

வன்னியில் நடந்த இறுதிப்போரின்போது மட்டுமல்ல, அதற்கு முன்பும் பல நூறுபேர் காணாமலாக்கப்பட்டிருக்கிறார்கள். இருந்தும் பல பத்து ஆண்டுகளாக இதற்கான நீதியோ, தீர்வோ வழங்கப்படவில்லை. ஆகவே பாதிக்கப்பட்ட மக்கள் தீர்வின்றி, நீதியின்றி, கண்ணீரோடும் முடிவற்ற கவலைகளோடும் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். தங்களுக்கான நீதி வேண்டும். உரிய தீர்வு கிடைக்க வேண்டும் என்ற இந்த எளிய மக்களின் குரலை, அந்தக் குரலின் தார்மீக நியாயத்தை மேலும் உறுதியோடு உலக சமூகத்தின் முன்னே வைத்திருக்க முடியும்.

இதன் மூலம் தோற்கடிக்கப்பட்ட போராட்டத்தை வெற்றியை நோக்கி நகர்த்துவதற்கான ஒரு வாய்ப்பை உருவாக்கியிருக்க முடியும்.

ஆனால், அது நடக்கவில்லை.

இப்பொழுதும் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் போராடுகிறார்கள்தான். ஆனால், அந்தக் குரல் வலுவுள்ளதா என்ற கேள்விக்குள்ளாகியுள்ளது. அதொரு சமூகத்தின், இனத்தின் கூட்டுக் குரலாக மாறியிருப்பதற்குப் பதிலாக தனிமைப்பட்டுள்ள சிறிய குரலாக மாறியிருக்கிறது. கடந்த 2026 செப்ரெம்பர் 30 இல் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட காணாமலாக்கப்பட்டோருக்கான சர்வதேச மாநாட்டில் ஓரளவுக்கு பல தரப்பினரும் கலந்து கொண்டாலும் இந்தப் போராட்டத்தை வலுவான முறையில் முன்கொண்டு செல்லக் கூடிய புதிய உள்ளடக்கங்களைக் கொண்டிருப்பதாக உணர முடியவில்லை.

காணாமலாக்கப்பட்டோருடைய விவகாரமும் அதற்கான போராட்டமும் உலகளாவிய அளவில் எப்படி வெற்றிகளைப் பெற்றிருக்கிறது? எத்தகைய அணுகுமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன? சர்வதேசப் பரிமாணத்தை எட்டுவதற்குரிய பொறிமுறைகள் என்ன? சர்வதேச அனுபவங்கள் என்ன? என்று பார்க்க வேண்டும்.

1970 களில் அர்ஜென்டினாவில் நடந்த இராணுவ ஆட்சியின்போது தங்களின் பிள்ளைகளை இழந்த தாய்மார் ஒன்றிணைந்து தலைநகரில் உள்ள சதுக்கமொன்றில் ஒவ்வொரு வாரமும் அமைதியாகப் போராடினர். தங்களுடைய போராட்டத்தின் அடையாளமாக அவர்கள் வெள்ளை நிறத்திலான தலைக்குட்டைகளை அணிந்து தங்களுடைய போராட்டத்தை அடையாளப்படுத்தினார்கள். இது உலக அளவில் கவனத்தை ஈர்த்தது.

இதனால் பிற்காலத்தில் அங்கே ஜனநாயக ஆட்சி மாற்றம் ஏற்பட்ட வேளையில், ஏற்கனவே ஆட்கடத்தல்கள், காணாலாக்கப்பட்ட விடயங்களில் சம்மந்தப்பட்ட இராணுவ அதிகாரிகளுக்கும் ஆட்சித் தலைவர்களுக்கும் நீதிமன்றங்களின் மூலம் கடுமையான தண்டனைகள் அளிக்கப்பட்டது. இப்படித்தான் சிலியில் ஜெனரல் அகஸ்ரோ பினோசெட்டின் சர்வாதிகார ஆட்சியின்போது காணாமலாக்கப்பட்டோரின் உடல்களைக் கண்டறிய அவர்களுடைய குடும்பத்தினரும் உறவினர்களும், பாலைவனப்பகுதிகளிலும் இரகசிய இடங்களிலும் தேடுதல்களைச் செய்தனர்.

இந்த மாதிரி உலகெங்கும் பல நாடுகளில் காணாமலாக்கப்படுதல் என்ற மிகக் கொடூரமான செயலை அங்கிருந்த அதிகார சக்திகள் மேற்கொண்டிருக்கின்றன. இதனால் இதனைத் தடுக்கும் அல்லது கட்டுப்படுத்தும் நோக்குடன், ஐக்கிய நாடுகள் சபை (UN) 2006 இல் காணாமலாக்கப்படுவதிலிருந்து அனைத்துத் தரப்பினரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையை (ICED) கொண்டு வந்தது. இது முழுமையான தீர்வைத் தராது என்றாலும் இந்தச் சட்டம் சர்வதேசக் கவனத்தை ஈர்ப்பதற்கு வாய்ப்பை அதிகம் வழங்குகிறது.

இதை நோக்கியதாகவே ஈழத்திலிருந்தும் தாய்மார் ஜெனிவா நோக்கியும் சர்வதேசக் கவனத்தை ஈர்க்கும் விதமாகவும் போராடுகிறார்கள். ஆனால், அதற்கான ஒருங்கிணைந்த கட்டமைப்பும் ஒருங்கிணைந்த செயற்றிட்டங்களும் ஒருங்கிணைந்த முன்னெடுப்பு மாதிரிகளும் வேண்டும். அதுவே உரிய கவனத்தைப் பெறும் செலவழிக்கப்படும் சக்திக்கான பெறுமானத்தையும் வழங்கும்.

ஒரு பத்தாண்டுகளுக்கு முன்பு, காணாமலாக்கப்பட்டோருடைய போராட்டம் பலருடைய கவனப்பரப்பிலும் இருந்தது. அன்று பலரும் அந்தப் போராட்டத்தோடு இணைந்து நின்றனர். அதற்கு ஆதரவை அளித்தனர். அந்தப் போராட்டத்துடன் நிற்க வேண்டியது அவசியம் என்று கருதினர். சர்வதேசக் கவனமும் ஓரளவுக்கு அதன் மீதிருந்தது.

ஆனால், பின்னர் அந்தப் போராட்டத்தைச் சில தமிழ் அரசியற் கட்சிகள் தம்முடைய அரசியல் முதலீட்டுக்கான நிகழ்ச்சி நிரலில் உள்ளீர்க்க முற்பட்டனர். இது நியாயமற்றது என்று அப்பொழுதே இந்தக் கட்டுரையாளர் உட்பட இந்தப் போராட்டத்தின் நியாயத்திலும் இதனுடைய வெற்றியிலும் அக்கறையைக் கொண்ட சிலர் வாதிட்டு வந்தனர். இருந்தும் குறித்த அரசியற் கட்சிகளினதும் சில அரசியல்வாதிகளினதும் தந்திரத்துக்குத் தம்மை (காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களில் சிலர்) விட்டுக் கொடுத்ததோடு இந்தப் போராட்டம் மெல்லச் சரிந்து பலவீனப்படத் தொடங்கியது. முக்கியமாக காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தினுள்ளே உள்விரிவுகள் ஏற்பட்டன. முரண்கள் தோன்றின. அணிகள் உருவாகின.

அரசியற் கட்சிகளோ அரசியல்வாதிகளோ போராட்டத்துக்கு ஆதரவளிப்பதில் பிரச்சினையில்லை. அது அவசியமும் கூட. இங்கே நடந்தது அதுவல்ல. தமக்கான செல்வாக்கை உயர்த்திக் கொள்வதற்காக காணாமலாக்கப்பட்டோருக்கான சங்கத்தையும் அதில் உள்ள உறுப்பினர்களின் ஆதரவையும் பயன்படுத்திக் கொண்டதேயாகும். இது பாதிக்கப்பட்ட மக்களுடன் ஆதரவாக நிற்பதற்குப் பதிலாக அவர்களுடைய கண்ணீரிலும் பசியிலும் தங்களுடைய லாபத்தைப் பெறும் கீழ்மையாகும்.

ஈழத்தமிழ் அரசியற் பரப்பில், 2009 க்குப் பிறகு எத்தகைய அரசியல் வெற்றிகளும் கிட்டவில்லை. 2009 க்குப் பிறகு அரசியற் பரப்பில் உள்ள எந்தவொரு சக்தியும் கட்சியும் அரசியல் வெற்றிகளைப் பெறக் கூடிய உள்ளடக்கத்தோடு செயற்படவில்லை. இந்தக் கணம் வரையில் இதுதான் நிலைமை. இந்த நிலையில் இந்தச் சக்திகளை அல்லது கட்சிகளையும் அவற்றிலுள்ள அரசியல்வாதிகளையும் நம்பி எந்தப் போராட்டத்தையும் எவரும் முன்னெடுக்க முடியாது. அரசியல் தலைமைகளும் தம்மால் முடியாத காரியங்களில் தலையிடாமல் விலகி நிற்பது பாதிக்கப்பட்டோருக்குப் பயனாகும். குறிப்பாக காணாமலாக்கப்பட்டோரின் உறவினர் தமது போராட்டத்தை சுயாதீனமான முறையில் முன்னெடுத்திருந்தால், அதனுடைய பெறுமானம் உச்சத்துக்குச் சென்றிருக்கும்.

இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட தொடக்க காலத்தில் ஊடகங்கள் மிகுந்த முக்கியத்துவத்தை - முதன்மையை அளித்தது உங்களுடைய நினைவிலிருக்கும். காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் தொடர்ச்சியாகத் தமது போராட்டத்தை முன்னெடுத்தபோது உள்ளூர் அமைப்புகள் பலவும் அவற்றில் கலந்து கொண்டன. பல்வேறு தரப்பினரும் ஆதரவை வழங்கினர். புலம்பெயர் சமூகமும் தன்னுடைய ஆதரவை வழங்கியிருந்தது.

(09ஆம் பக்கம் பார்க்க)

# ஈழத் தமிழ்ச் சமூகம்: மீட்புக்கான வழிகளைக் கண்டறிவது எப்படி?

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு நல்ல உதாரணம், அந்த நாட்களில் மலேசியாவிலிருந்து கிளிநொச்சிக்கு வந்திருந்த எழுத்தாளர் குழாம் ஒன்று இந்தப் போராட்டத்தில் உணர்வுபூர்வமாகப் பங்கேற்றிருந்தது. அவர்களுடைய பயண விதிகளுக்கு அமைய இந்தப் போராட்டத்தில் பங்கேற்கவே முடியாது. இலங்கை அரச புலனாய்வுப் பிரிவினரின் கண்காணிப்புகள் தீவிரமடைந்திருந்த நாட்கள் அது என்பதால் இலங்கை அரசு அவர்கள் மீது சட்ட நடவடிக்கையை எடுக்கக்கூடிய அபாயச் சூழல் இருந்தது. அவர்கள் இலங்கைக்கு வருகை தந்திருந்தது சுற்றுலாப் பயணிகளுக்கான வீசாவில். இருந்தும் அவர்கள் இதையெல்லாம் பொருட்படுத்திக் கொள்ளவேயில்லை. தமக்கு வரக்கூடிய நெருக்கடிகளையும் விட, பாதிக்கப்பட்ட மக்களுடைய நியாயமான போராட்டத்தோடு தாம் இந்தச் சந்தர்ப்பத்தில் நிற்க வேண்டும் என்ற உணர்வோடு அதில் பங்கேற்றனர். அந்த மக்களுடைய கண்ணீர்க்கதைகளைக் கேட்டறிந்தனர். அந்தப் போராட்டத்துக்குத் தம்மால் இயலக்கூடிய நிதிப்பங்களிப்பையும் செய்தனர்.

ஆக இப்படிப் பல்வேறு தரப்பினரின் தார்மீக ஆதரவு அன்று காணாமலாக்கப்பட்டோருக்கான போராட்டத்துக்கு இருந்தது. இதன் காரணமாக காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஜெனிவாவில் நடக்கும் மனித உரிமைகள் கூட்டத் தொடர்க்காலத்தில் அங்கே சென்று தமது கோரிக்கைகளையும் நியாயத்தையும் முன்வைக்கக்கூடிய வாய்ப்புகளும் ஏற்படுத்தப்பட்டன.

இதெல்லாம் அன்று இலங்கை அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தின. தனக்கு வருகின்ற நெருக்கடிகளைச் சமாளித்துக் கொள்வதற்காக இலங்கை அரசு உண்மையைக் கண்டறிதல், காணாமலாக்கப்பட்டோருடைய உறவுகளுக்கான தீர்வை வழங்குதல் என்ற பேரில் ‘காணாமல்போன ஆட்கள் தொடர்பான அலுவலகம்‘ (OMP) என ஒன்றை உருவாக்கியது.

இந்தப் பணிமனையின் பணிகளைப் பற்றி மாவட்ட ரீதியாக ஒரு பரப்புரையை அது தொடக்கத்தில் செய்தது. கூடவே காணாமலாக்கப்பட்டோரைப் பற்றிய பதிவுகளைச் செய்யுமாறு கோரியது. தான் நீதி வழங்குவதற்கும் நிவாரணம் அளிப்பதற்கும் தனக்கு உரிய தரவுகள் தேவை என்ற தோரணையில் இந்த நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டன.

இது இலங்கை அரசின் தந்திரோபாய நடவடிக்கை. ஏமாற்று முயற்சி. உண்மையில் இந்தப் பணிமனையின் மூலமாக நீதியோ நிவாரணமோ கிடைக்கப்போவதில்லை என்று தொடக்கத்திலிருந்தே இந்தப் பணிமனைக்கு எதிரான போராட்டத்தில் பல தரப்பினரும் ஈடுபட்டனர். இப்போதும் OMP க்கு எதிரான குரல்கள் ஒலிக்கின்றன. ஆனால், இலங்கை அரசு எதனை எதிர்பார்த்ததோ அது ஏறக்குறைய இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது.

இலங்கை அரசு எதிர்பார்த்தது, காணாமலாக்கப்பட்டோரின் போராட்டம் தொடராமல், அது தனக்கு நெருக்கடியை ஏற்படுத்தாமல் சிதைந்து போக வேண்டும் என. இதற்காக அது இரண்டு வகையான வழிமுறைகளைப் பின்பற்றியது. ஒன்று, காணாமலாக்கப்பட்டோருக்கான இழப்பீட்டை வழங்குது என்பது. தொடக்கத்தில் இதற்கு எதிர்ப்பு வந்தாலும் காலப்போக்கில் இழப்பீட்டைப் பெறும் உளநிலைக்கு மக்கள் வருவர். அதுவொரு தவிர்க்கவே முடியாத யதார்த்தமாக இருக்கும். அப்படி வரும்போது குறித்ததொரு தொகையைக் கொடுத்து, இறப்புச் சான்றையும் வழங்கி விடலாம். இது மெல்ல மெல்ல நிறைவேறி வருகிறது.

இரண்டாவது, காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறிந்து உண்மையை வெளிக்கொண்டு வருதல் என்பது. இதன் மூலம் இந்தப் போராட்டத்தின் தீவிரத்தைக் குறைத்து விடலாம் என்று அது நம்பியது. அதாவது அரசாங்கம் ஏதோ ஒரு செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. குறிப்பாக இன்றைய NPP ஆட்சியில் இந்த நம்பிக்கை மேலும் அதிகரித்துள்ளது. ஆனால், எந்த ஆட்சித் தரப்பாக இருந்தாலும் அதனால் இலங்கைப் படையினரைப் பகைத்துக் கொள்ளும் துணிவுமிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படப்போவதில்லை. அதற்கு பௌத்த பிக்குகள் அனுமதிக்கவும் மாட்டார்கள்.

இதேவேளை தமிழ் அரசியல்வாதிகள் இந்தப் போராட்டத்தில் ஊடுருவிச் செயற்படுவதையும் இலங்கை அரசு வரவேற்றது. ஏனெனில் இந்தப் போராட்டம் வழமையைப்போல தமிழ் அரசியற் தலைமைகள் தமது அரசியல் நலனுக்காக பின்னணியில் நின்று ஊக்குவிக்கப்பதால் நடக்கிறது. ஆகவே இது அரசியற் பின்னணி, அரசியற் தூண்டலின் அடிப்படையில் நடக்கிறது என்று வெளியுலகுக்குக் காண்பிக்க முடியும் என. அதுவும் தாராளமாக நடந்து விட்டது.

இன்று காணாமலாக்கப்பட்டோருக்கான போராட்டத்தை நசுக்கி விடவும் அதனுடைய முக்கியத்துவத்தைக் குறைப்பதற்குமான வழிமுறைகளில் இலங்கை அரசு முன்னகர்ந்துள்ளது. சர்வதேச சமூகம் தன்னுடைய தீவிர ஆதரவுத் தன்மையை வெளிப்படுத்திக் கொள்ளாமல், ஏதோ சாட்டுப்போக்குக்கு இந்தப் போராட்டங்களில் கலந்து கொள்வதும் அதனோடு நிற்பதாகக் காட்டுவதும் நடக்கிறது. மற்றும்படி அது எந்த வகையிலும் இந்த விவகாரத்தில் அழுத்தங்களைக் கொடுப்பதாக இல்லை. குறைந்த பட்சம் இந்த மக்களுக்கான இடைக்கால நிவாரணமொன்றை அளிப்பதற்கும் அது முயற்சிக்கவில்லை.

தமிழ்ச் சமூகமும் இந்தப் போராட்டத்தைச் சர்வதேசமயப்படுத்துவதிலிருந்து பின்தங்கியுள்ளது. அது தன்னுடைய பலவீனங்களைக் கடந்து இதைப் பலமான முறையில் முன்னகர்த்துவதற்கான முயற்சிகளில் தாராளமாக ஈடுபடலாம். ஈடுபட வேண்டும். அதற்கான காலம் செம்மணியில் மீட்கப்படும் உண்மைகளின் மூலம் உருவாகியுள்ளது. இதைச் சரியாகப் பயன்படுத்துவதன் மூலம் ஈழத் தமிழர்கள் தங்களுடைய நீதிக்கான போராட்டத்தையும் நியாயத்துக்கான குரலையும் வலுவாக்க முடியும். காலம் எப்போதும் நற்பரிசுகளைத் தந்து கொண்டேயிருக்கும். அதைக் கையேற்பதும் கை விடுவதும் நமது ஆற்றலிலும் அக்கறைகளிலுமே உள்ளது.






# ஹவுதிகள் யேமனில் வெற்றிகரமான முன்னேற்றம்!

## சவுதி - அமெரிக்க ஆதரவு அரசு வீழ்ச்சி!!

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

யேமனில் பல ஆண்டுகளாக நீடித்து வந்த மோதல் மீண்டும் ஆபத்தான கட்டத்தை எட்டியுள்ளது. குறிப்பாக 2026 செப்ரெம்பர் 8ஆம் திகதி ஹவுதி இயக்கம் சவுதி அரேபியாவின் தென்பகுதியில் மேற்கொண்ட ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்கள், யேமன் போர் மீண்டும் முழுமையான பிராந்தியப் போராக மாறக்கூடும் என்ற அச்சத்தை உருவாக்கியுள்ளன. சவுதி அதிகாரிகளின் தகவலின்படி, அப்ஹா, கமிஸ் முஷைத், ஜிசான் மற்றும் நஜ்ரான் பகுதிகளில் பொதுமக்கள் மற்றும் பொருளாதார உட்கட்டமைப்புகள் தாக்கப்பட்டதில் பலர் காயமடைந்துள்ளனர். பெண்களும் குழந்தைகளும் காயமடைந்தவர்களில் அடங்குகின்றனர்.

இந்தத் தாக்குதல்களில் சவுதி அரசின் எண்ணெய் நிறுவனமான அராம்கோவுடன் தொடர்புடைய வசதிகளும், விமானத் தளங்களும், அப்ஹா சர்வதேச விமான நிலையமும் இலக்குகளாக இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பல இடங்களில் தீ விபத்துகள் ஏற்பட்டதுடன், சில எரிசக்தி நிலையங்களின் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதாக சவுதி எரிசக்தி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

### மீண்டும் வெடித்தது யேமன் மோதல்

யேமனில் ஹவுதி இயக்கம் 2014ஆம் ஆண்டு தலைநகர் சனாவைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து உள்நாட்டுப் போர் தீவிரமடைந்தது. 2015ஆம் ஆண்டு சவுதி அரேபியா தலைமையிலான கூட்டணி, சர்வதேச அங்கீகாரம் பெற்ற யேமன் அரசுக்கு ஆதரவாக இராணுவ நடவடிக்கையில் இறங்கியது. இதன் மூலம் யேமன் மோதல் உள்நாட்டுப் போரைத் தாண்டி, சவுதி அரேபியா மற்றும் ஈரான் இடையிலான பிராந்தியப் போட்டியின் முக்கியமான களமாகவும் மாறியது.

2022ஆம் ஆண்டு ஐ.நா. ஆதரவுடன் ஏற்பட்ட போர் நிறுத்தம், பல ஆண்டுகளாக நீடித்த கடுமையான மோதல்களை கணிசமாகக் குறைத்தது. ஆனால் அந்த அமைதி நிரந்தர அரசியல் தீர்வாக மாறவில்லை. சமீப மாதங்களில் மீண்டும் மோதல்கள் தீவிரமடைந்துள்ள நிலையில், யேமன் அரசுப் படைகள் ஹவுதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை மீட்கும் முயற்சியை முன்னெடுத்துள்ளன. அதற்கு பதிலடியாக ஹவுதிகளும் ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களை அதிகரித்துள்ளனர்.

செப்ரெம்பர் 8 தாக்குதல் ஒரு சாதாரண எல்லைத் தாக்குதல் அல்ல. ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் ஒரே நேரத்தில் பல நகரங்களையும் எரிசக்தி கட்டமைப்புகளையும் இலக்காகக் கொண்டுள்ளன. அராம் கோவின் வசதிகள் தாக்கப்பட்டிருப்பது சவுதி பொருளாதாரத்தின் இதயப்பகுதியை நேரடியாக அச்சுறுத்தும் நடவடிக்கையாக பார்க்கப் படுகிறது.

ஜிசானில் நாளொன்றுக்கு சுமார் 400,000 பீப்பாய்கள் கச்சா எண்ணெயை சுத்திகரிக்கும் திறன் கொண்ட சுத்திகரிப்பு நிலையமும் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் பிராந்திய எரிசக்தி விநியோகம் மட்டுமல்லாமல் சர்வதேச எண்ணெய்ச் சந்தையும் பதற்றமடைந்துள்ளது. தாக்குதல்களின் பின்னணியில் பிரென்ட் கச்சா எண்ணெய் விலை ஒரு கட்டத்தில் 100 அமெரிக்க டொலர் அருகில் சென்றது.

### பாப் அல்-மண்டப் முக்கியத்துவம்

யேமன் மோதலின் மிகப் பெரிய புவிசார் அரசியல் முக்கியத்துவம் பாப் அல்-மண்டப் நீரிணையுடன் தொடர்புடையது. யேமனுக்கும் ஆப்பிரிக்கக் கொம்புப் பகுதியிலுள்ள ஜிபூட்டி மற்றும் எரித்திரியாவுக்கும் இடையில் அமைந்துள்ள இந்த நீரிணை, செங்கடலை ஏடன் வளைகுடா மற்றும் இந்தியப் பெருங்கடலுடன் இணைக்கிறது. இதன் வழியாக செல்லும் கப்பல்கள் செங்கடல் - சுயஸ் கால்வாய் பாதையைப் பயன்படுத்தி ஆசியா, மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பாவை இணைக்கின்றன. 2023ஆம் ஆண்டில் உலக கடல் வர்த்தகத்தின் சுமார் 8.7 சதவீத அளவு பாப் அல்-மண்டப் வழியாகச் சென்றது.

மேலும், அமெரிக்க எரிசக்தி தகவல் நிர்வாகத்தின் சமீபத்திய தரவுகளின்படி, 2025ஆம் ஆண்டின் முதல் பாதியில் நாளொன்றுக்கு சுமார் 4.2 மில்லியன் பீப்பாய்கள் எண்ணெய் மற்றும் பெற்றோலியப் பொருட்கள் இந்த நீரிணை வழியாகச் சென்றுள்ளன. எனவே, இந்த நீர்வழியில் போக்குவரத்து தடைப்பட்டால் அதன் தாக்கம் யேமன் அல்லது சவுதி அரேபியாவுடன் மட்டும் நின்றுவிடாது. ஐரோப்பாவிற்கும் ஆசியாவிற்கும் இடையிலான கப்பல் போக்குவரத்து பாதிக்கப்படும் கப்பல்கள் ஆப்பிரிக்காவின் தென்முனையான கேப் ஆஃப் குட் ஹோப் வழியாக நீண்ட பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டிய நிலை ஏற்படும். இதனால் பயண நேரமும் கப்பல் செலவும் காப்புறுதி செலவும் அதிகரிக்கக்கூடும்.

### ஈரானின் நிழல் வகிபாகம்

ஹவுதி இயக்கம் ஈரானுடன் நெருங்கிய உறவு கொண்டிருப்பது இந்த மோதலுக்கு மேலும் ஒரு பரிமாணத்தை வழங்குகிறது. ஈரான் ஹவுதிகளுக்கு அரசியல் மற்றும் இராணுவ ஆதரவு வழங்குவதாக சவுதி அரேபியாவும் அதன் கூட்டாளிகளும் நீண்டகாலமாக குற்றம்சாட்டி வருகின்றன. அதேவேளை, ஹவுதிகள் தங்களது நடவடிக்கைகள் யேமன் மீதான சவுதி இராணுவ நடவடிக்கைகளுக்கான பதிலடி என்றும் கூறுகின்றனர். சமீபத்திய தாக்குதல்களும் சவுதி தாக்குதல்களுக்கு பதிலடியாக நடத்தப்பட்டதாக ஹவுதி இராணுவப் பேச்சாளர் யஹ்யா சரீ கூறியுள்ளார்.

இதனால் யேமன் போர், யேமன் அரசுப் படைகள் மற்றும் ஹவுதிகளுக்கு இடையிலான உள்நாட்டுப் போர் மட்டுமல்லாமல், சவுதி அரேபியா - ஈரான் போட்டியின் ஒரு பகுதியாகவும் பார்க்கப்படுகிறது. இதனால் மனிதாபிமானப் பேரழிவு மீண்டும் தீவிரமடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்தப் போரின் மிகப்பெரிய பாதிப்பை சந்திப்பவர்கள் யேமன் மக்கள். பல ஆண்டுகால போர் ஏற்கனவே நாட்டின் பொருளாதாரத்தை சிதைத்துள்ளது. உணவு, சுகாதாரம், குடிநீர், மின்சாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளுக்கான அணுகலும் பல பகுதிகளில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

2026ஆம் ஆண்டில் யேமனில் சுமார் 2.23 கோடி மக்கள் மனிதாபிமான உதவி தேவைப்படும் நிலையில் இருப்பதாக ஐ.நா. அகதிகள் அமைப்பு தெரிவிக்கிறது. அதேவேளை, சுமார் 52 இலட்சம் பேர் உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ளனர். சமீபத்திய மோதல்கள் காரணமாக ஆயிரக்கணக்கானோர் மீண்டும் இடம்பெயரத் தொடங்கியுள்ளனர். ஆகவே, இராணுவ மோதல் நீடித்தால், ஏற்கனவே மோசமான நிலையில் உள்ள யேமனின் மனிதாபிமான நெருக்கடி மேலும் மோசமடையும் அபாயம் உள்ளது.

### பிராந்திய யுத்த எச்சரிக்கை

செப்ரெம்பர் 8 தாக்குதலுக்குப் பின்னரும் செப்ரெம்பர் 9ஆம் திகதி ஹவுதிகள் அப்ஹா, கமிஸ் முஷைத், ஜிசான் உள்ளிட்ட சவுதியின் தென்பகுதி நகரங்களை மீண்டும் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களால் தாக்கியதாக சவுதி தலைமையிலான கூட்டணி தெரிவித்துள்ளது. இதனால் நிலைமை ஒரே நாளில் முடிவடையும் மோதல் அல்ல என்பது தெளிவாகிறது.

சவுதி அரேபியா பதிலடி நடவடிக்கைகளை மேற்கொண்டால், யேமனில் தரை மற்றும் வான்வழித் தாக்குதல்கள் மேலும் தீவிரமடைய லாம். மறுபுறம், ஹவுதிகள் பாப் அல்-மண்டப் மற்றும் செங்கடல் கப்பல் போக்குவரத்தை மேலும் இலக்காகக் கொண்டால், பிரச்சினை சர்வதேச கடல் பாதுகாப்பு நெருக்கடியாக மாறக்கூடும்.

எனவே, யேமனில் மீண்டும் தீவிரமடைந்துள்ள போர் ஒரு நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினையாக மட்டும் பார்க்க முடியாத நிலையை எட்டியுள்ளது. சவுதி அரேபியாவின் எண்ணெய் உற்பத்தி, செங்கடல் கப்பல் போக்குவரத்து, பாப் அல்-மண்டப் நீரிணை, சர்வதேச எண்ணெய் விலை மற்றும் உலக வர்த்தகம் ஆகிய அனைத்தும் ஒன்றோடொன்று இணைந்துள்ளன. அதனால் யேமனில் போர் மேலும் விரிவடைவதைத் தடுப்பதும், உடனடி மனிதாபிமான பாதுகாப்பை உறுதி செய்வதும், நீண்டகால அரசியல் தீர்வை நோக்கி நகர்வதும் சர்வதேச சமூகத்தின் அவசரப் பொறுப்பாகியுள்ளது. ■

# அவுஸ்திரேலியாவில் தமிழ் மொழி வளர்ச்சி

## தமிழ்ப் பாடசாலைகளும் எதிர்கால இளம் சந்ததியினரும்!

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழ் மக்களின் நீண்டகால மொழிப் பாதுகாப்பு மற்றும் அடுத்த தலைமுறையினரிடம் தமிழ் மொழியைத் தொடர்ந்து கொண்டு செல்வதற்கான முயற்சிகளுக்கு புதிய ஊக்கம் கிடைத்துள்ளது. தமிழ் உள்ளிட்ட ஆசிய மொழிகளின் கல்வியை வலுப்படுத்தும் நோக்கில் அவுஸ்திரேலிய மத்திய அரசு மேற்கொண்டுள்ள புதிய நிதி முதலீடு, தமிழ் சமூகத்தினரிடையே பெரும் வரவேற்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆளும் லேபர் கட்சியின் அல்பனீஸ் அரசாங்கம், சமூக மொழிப் பள்ளிகளின் மூலம் இளம் அவுஸ்திரேலியர்கள் தமது குடும்ப மொழிகளில் உயர்நிலைப் பள்ளி மட்டம் வரை தொடர்ந்து கல்வி கற்று, நடைமுறைப் பயன்பாட்டில் மொழித் திறனை வளர்த்துக்கொள்ளும் வகையில் பல்வேறு நிதித் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. குறிப்பாக, Fluency in Asian Languages திட்டத்தின் கீழ் தமிழ், ஹிந்தி, தெலுங்கு, மலையாளம், பஞ்சாபி, குஜராத்தி, வங்காள, உருது உள்ளிட்ட பல மொழிகளுக்கு ஆதரவு வழங்கப்படுகிறது.

### தமிழ் மொழிக்கு முக்கியமான வாய்ப்பு

2026 ஒகஸ்ட் 21 அன்று அவுஸ்திரேலிய அரசாங்கம் வெளியிட்ட அதிகாரபூர்வ அறிவிப்பில், தமிழ் மொழிக் கல்வியை மேம்படுத்துவதற்காக Tamil Study Centre Homebush Inc மற்றும் NSW Federation of Tamil Schools Inc ஆகிய அமைப்புகள் மேற்கொள்ளவுள்ள திட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்துடன் ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையம், தமிழ் மொழித் திறனை மேம்படுத்தும் ஒரு முன்னோடித் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது. அதன் பின்னர் இந்தத் திட்டத்தை நியூ சவுத் வேல்ஸ் மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தவும், இணையவழிக் கற்றல் வளங்களை நாடு முழுவதும் பகிர்ந்து கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் சிட்னியைத் தாண்டி அவுஸ்திரேலியாவின் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழ் மாணவர்களும் நவீன கற்றல் வளங்களைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வாய்ப்பு உருவாகும்.

அதேவேளை, NSW Federation of Tamil Schools Inc, உயர்நிலைப் பள்ளி மாணவர்களிடையே தமிழ் மொழிக் கற்றலை வலுப்படுத்துவதற்காக புதிய கற்றல் வளங்களையும், தமிழ் மொழியை நிஜ வாழ்க்கைச் சூழல்களில் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளையும் உருவாக்கவுள்ளது. இது மிகவும் முக்கியமான முன்னேற்றமாகும்.

### 12ஆம் ஆண்டு வரை தமிழ்

தமிழ் மொழிக் கல்வியில் மிகப்பெரிய சவால்களில் ஒன்று, ஆரம்பப் பள்ளி ஆண்டுகளில் ஆர்வத்துடன் தமிழ் கற்கத் தொடங்கும் மாணவர்கள், உயர்நிலைப் பள்ளிக்குச் செல்லும்போது தொடர்ந்து அந்தக் கல்வியை மேற்கொள்ளாமல் விடுவது ஆகும். இதனை மாற்றும் நோக்கிலேயே புதிய அரசாங்க முதலீட்டின் முக்கியமான கவனம் அமைந்துள்ளது.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் திட்டங்கள் ஆண்டு 7 முதல் 12 வரையிலான மாணவர்களைத் தொடர்ந்து மொழிக் கல்வியில் ஈடுபடுத்துவதையும், வெறுமனே மொழியைப் புரிந்துகொள்வதைத் தாண்டி நடைமுறைப் பயன்பாட்டில் சிறந்த மொழித் திறனை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. 2026 மே மாதத்தில் அறிவிக்கப்பட்ட திட்டத்தின் கீழ் ஒன்பது அமைப்புகளுக்கு மொத்தம் 2.5 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர் ஆதரவு வழங்கப்பட்டதாக அரசாங்கம் தெரிவித்தது. இந்த முதலீடு பரந்த 25 மில்லியன் டொலர் சமூக மொழிப் பள்ளிகள் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

மேலும், 2026 ஒகஸ்ட் அறிவிப்பின்படி, 2025-26 முதல் நான்கு ஆண்டுகளுக்கான சமூக மொழிப் பள்ளிகளுக்கான மொத்த அரசாங்க முதலீடு 25.6 மில்லியன் அவுஸ்திரேலிய டொலராக உள்ளது. இதன் மூலம் 90,000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் 80-க்கும் அதிகமான மொழிகளைக் கற்க உதவி கிடைக்கும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

### ஆசிரியர்களுக்கு நவீன பயிற்சி

மொழிக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு மாணவர்களுக்கு மட்டும் வளங்களை வழங்குவது போதாது. திறமையான ஆசிரியர்களும் நவீன கற்பித்தல் முறைகளும் அவசியம். இதனை கருத்தில் கொண்டு ஆசிரியர் பயிற்சி, புதிய பாடவளங்கள், டிஜிட்டல் கற்றல் மற்றும் தொழில்முறை மேம்பாடு ஆகியவற்றுக்கும் இந்த நிதித் திட்டம் முக்கியத்துவம் அளிக்கிறது.




அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகம் சமூக மொழி ஆசிரியர்களுக்கான இணைய மொழி மையங்களை (Digital Language Hubs) உருவாக்கவுள்ளது. அதேபோல் சிட்னி பல்கலைக்கழகம் அதேபோல் 7-12 வகுப்புகளை உருவாக்குதல், ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் நாடு முழுவதும் பயன்படுத்தக்கூடிய கற்றல் வளங்களை உருவாக்குதல் போன்ற பணிகளில் பங்களிக்கவுள்ளது.

இது தமிழ் மொழிக் கல்விக்கு மிக முக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியது. பாரம்பரிய முறையில் பாடப்புத்தகத்தை மட்டும் மையமாகக் கொண்ட கற்பித்தலைத் தாண்டி, இணையவழி காணொளிகள், ஊடாடும் கற்றல் கருவிகள், டிஜிட்டல் பாடப்பொருட்கள் மற்றும் மாணவர்களின் வயதுக்கும் திறமைக்கும் ஏற்ற கற்றல் முறைகள் உருவாக்கப்படுவதற்கான வாய்ப்பு கிடைக்கிறது.

### தமிழ்க் கல்வி நிலையங்களின் நீண்ட பயணம்

இந்தப் புதிய வாய்ப்பைப் புரிந்துகொள்ளும்போது ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையத்தின் செயற்பாடுகள் குறித்து அறிய வேண்டும். 1987ஆம் ஆண்டு தமிழ் மொழியையும் தமிழ்க் கலாசாரத்தையும் இளம் தலைமுறையினருக்குக் கற்பிக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிலையம், பல தசாப்தங்களாக சிட்னி தமிழ் சமூகத்தின் மொழிக் கல்வியில் முக்கியமான பங்காற்றி வருகிறது. ஆரம்பத்தில் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களுடனும் ஆசிரியர்களுடனும் தொடங்கிய இந்தப் பயணம் பின்னர் விரிவடைந்தது.

தமிழ்ப் பாடத்திட்டம் மற்றும் பாடப்புத்தகங்களின் வளர்ச்சியிலும் இந்த நிலையம் பங்களித்துள்ளது. மேலும், NSW Federation of Tamil Schools உருவாக்கத்திலும் ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையம் முக்கியமான பங்கு வகித்ததாக அதன் வரலாற்றுப் பதிவுகள் தெரிவிக்கின்றன. எனவே, இப்போது கிடைக்கும் புதிய அரசாங்க ஆதரவு பல ஆண்டுகளாக தமிழ் சமூகத்தின் தன்னார்வத் தொண்டர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்வியாளர்கள் மேற்கொண்ட முயற்சிகளுக்கு கிடைத்த ஒரு முக்கியமான அங்கீகாரமாகவும் பார்க்கப்படுகிறது.

### மொழி என்பது வெறும் பாடம் அல்ல

தமிழ் மொழியைப் பாதுகாப்பது என்பது ஒரு பாடத்தைப் பாதுகாப்பது மட்டுமல்ல. அது ஒரு தலைமுறையின் வரலாறு, குடும்ப உறவு, பண்பாடு, இலக்கியம், கலை, நினைவகம் மற்றும் அடையாளத்தை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் பணியாகும். அவுஸ்திரேலியாவில் பிறந்து வளர்கின்ற தமிழ் இளைய தலைமுறையினர், தமது பெற்றோர் மற்றும் பாட்டன்-பாட்டிமார்களுடன் தமிழில் உரையாடும் திறனைப் பெறுவது குடும்ப உறவுகளையும் வலுப்படுத்துகிறது. அதே நேரத்தில், இருமொழி அல்லது பன்மொழித் திறன் மாணவர்களின் கல்வி மற்றும் எதிர்கால வேலைவாய்ப்புகளுக்கும் கூடுதல் வாய்ப்புகளைத் திறக்கக்கூடும்.

அவுஸ்திரேலிய அரசாங்கமும் மொழித் திறன் என்பது கலாசார அடையாளத்தை மட்டுமல்லாமல், கல்வி, வேலைவாய்ப்பு, பிராந்திய உறவுகள் மற்றும் நாட்டின் எதிர்கால பொருளாதாரத் தேவைகளுக்கும் பயனுள்ளதாக இருப்பதை வலியுறுத்துகிறது.

அரசாங்க நிதி கிடைப்பது மிகப்பெரிய வாய்ப்பாக இருந்தாலும், அது மட்டுமே தமிழ் மொழியின் எதிர்காலத்தை உறுதி செய்யாது. பெற்றோர்கள் தமது பிள்ளைகளைத் தொடர்ந்து தமிழ் வகுப்புகளுக்கு அனுப்ப வேண்டும். மாணவர்கள் தமிழ் பேசுவதற்கும் வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் ஊக்குவிக்கப்பட வேண்டும். தமிழ் பள்ளிகளும் தங்களது கற்பித்தல் முறைகளை இன்றைய தலைமுறையின் தேவைகளுக்கு ஏற்ப தொடர்ந்து மாற்றிக் கொள்ள வேண்டும்.

அதேபோல், தமிழ் ஊடகங்கள், எழுத்தாளர்கள், பல்கலைக்கழகங்கள், கல்வியாளர்கள் மற்றும் சமூக அமைப்புகள் ஒன்றிணைந்து டிஜிட்டல் தமிழ் வளங்களை உருவாக்க வேண்டும். குறிப்பாக, தமிழ் மொழியை வெறும் சனிக்கிழமை அல்லது வார இறுதி வகுப்பின் பாடமாக மட்டும் பார்க்காமல், மாணவர்களின் அன்றாட வாழ்க்கையோடு இணைக்க வேண்டியது அவசியம். தமிழ் விவாதங்கள், பேச்சுப் போட்டிகள், நாடகங்கள், இலக்கிய நிகழ்வுகள், திரைப்படம், இசை, பொட்காஸ்ட் மற்றும் சமூக ஊடக உள்ளடக்கங்கள் ஆகியவற்றின் மூலம் இளம் தலைமுறையினரிடம் தமிழைப் பயன்படுத்தும் ஆர்வத்தை உருவாக்க முடியும்.

### தமிழ்ச் சமூக எதிர்கால பொறுப்பு

அவுஸ்திரேலிய மத்திய அரசின் புதிய முதலீடு, தமிழ் மொழிக் கல்விக்கு கிடைத்துள்ள முக்கியமான புதிய வாய்ப்பாகும். குறிப்பாக ஆண்டு 7-12 மாணவர்களைத் தொடர்ந்து தமிழ் கற்கச் செய்வது, ஆசிரியர்களின் திறனை மேம்படுத்துவது, டிஜிட்டல் கற்றல் வளங்களை உருவாக்குவது மற்றும் நியூ சவுத் வேல்ஸைத் தாண்டி தேசிய அளவில் வளங்களைப் பகிர்வது ஆகியவை எதிர்காலத்தில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும்.

தமிழ் உலகின் தொன்மையான செம்மொழிகளில் ஒன்று. அவுஸ்திரேலியாவின் பன்முகக் கலாசார சமூகத்தில் தமிழ் இன்று ஒரு வாழும் மொழியாகத் தொடர்ந்து வளர்ந்து வருகிறது. அந்த மொழி அடுத்த தலைமுறையினரின் நாவில், எழுத்தில், சிந்தனையில் மற்றும் படைப்பாற்றலில் தொடர்ந்து வாழ வேண்டுமெனில் அரசாங்க ஆதரவுடன் சமூகத்தின் உறுதியான பங்களிப்பும் தேவை.

எனவே, இந்த புதிய நிதி ஒதுக்கீடு ஒரு சாதாரண கல்வி மானியமாக மட்டும் பார்க்கப்படக் கூடாது. அது தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்ற உணர்வுடன் பல தசாப்தங்களாக உழைத்த ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமூகத் தொண்டர்கள் மற்றும் தமிழ் கல்வி நிறுவனங்களின் முயற்சிகளுக்கு கிடைத்த புதிய ஊக்கமாகும். அரசாங்கத்தின் நிதி ஆதரவும், சமூகத்தின் அர்ப்பணிப்பும், நவீன கல்வித் தொழில்நுட்பமும் ஒன்றிணைந்தால், அவுஸ்திரேலியாவில் தமிழ் மொழியின் எதிர்காலம் மேலும் வலுவாகும்.

இன்றைய தமிழ் மாணவர்கள் நாளைய தமிழ் ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சமூகத் தலைவர்களாக உருவாகும் பாதையை இந்த முயற்சி திறந்து வைக்கக்கூடும்.

தமிழைக் காப்பது என்பது கடந்த காலத்தை மட்டும் பாதுகாப்பதல்ல் எதிர்கால தலைமுறைக்கு ஒரு உயிருள்ள மொழியையும் பண்பாட்டு அடையாளத்தையும் கையளிப்பதுமாகும்.

ADVERTISEMENT

LIBERAL VICTORIA

# Ann-Marie Hermans MP

**Liberal State Member for South Eastern Metropolitan Region**
**Shadow Assistant Minister for Community Safety**




Suite 1 / 31 Princes Highway, Dandenong VIC 3175 Ann-MarieHermans.com.au
ann-marie.hermans@parliament.vic.gov.au AnnMarieHermansMP 03 9794 7667

Authorised by Ann-Marie Hermans MP, Suite 1 / 31 Princes Highway, Dandenong VIC 3175

# MS JEWELRY WORK SHOP

No:- 87, McIntyre Road, Sunshine North VIC 3020 (Inside Barber Shop)

WORKING DAYS
MON - SUN (10 AM TO 6 PM)
WEDNESDAY (CLOSED)

+61 469 033 450





காது குத்துதல், பழைய நகைகள் திருத்துதல், உடைந்த நகைகள் ஒட்டுதல் மற்றும் புதிய நகைகள் என்பன செய்து கொடுக்கப்படும்

Ear Piercing, Old Jewelry Repair, Broken Jewelry Repair, and New Jewelry Will Be Provided


XD
XDream Jewellery
Manufacturers & Importers of Modern Styles in 22K (916) Solid Gold
Where Tradition Meets Timeless Luxury
Discover gold jewellery, designed to sparkle for generations.
22K & 24K Pure Gold – Exquisite Designs, Unmatched Craftsmanship
Cash When You Need It
Trust You Can Count On
Bring your gold Top Dollar Paid
Safe & Secure • Same-Day Service
02 8677 4490
xdreamjewellery.com.au
08xdream@gmail.com
8 Aurelia St,
Toongabbie NSW 2146

# Sai Shree Foods

Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

# ஆஸியின் முதல் பெண் நீதியரசர் மறைவு



ஆஸ்திரேலிய சட்டத்துறையின் முன்னோடி நீதியரசரான மேரி காட்ரான் (Mary Gaudron), தனது 83-வது வயதில் செப்ரெம்பர் 14 ஆம் திகதி காலமானார்.

1987-ஆம் ஆண்டு, தனது 44-வது வயதில் ஆஸ்திரேலிய உயர் நீதிமன்றத்தின் முதல் பெண் நீதியரசராக நியமிக்கப்பட்ட மேரி காட்ரான், 2003-ஆம் ஆண்டு வரை அந்தப்பணியில் தொடர்ந்தார்.

உயர் நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றிய காலத்தில், ஆஸ்திரேலிய பூர்வக்குடி மக்களின் நில உரிமை தொடர்பான வரலாற்றுச் சிறப்புமிக்க 'மாபோ எதிர் குயின்ஸ்லேந்து' (Mabo vs Queensland) வழக்கு உட்பட, அந்நாட்டின் சட்டக் கட்டமைப்பை வடிவமைத்த பல முக்கியமான தீர்ப்புகளில் அவர் பங்களித்துள்ளார்.

அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பில், நீதிபதி மேரி காட்ரான் மற்றும் சக உயர் நீதிமன்ற நீதிபதியான வில்லியம் டீன் ஆகிய இருவரும், ஆஸ்திரேலிய பழங்குடியினரின் நிலங்கள் பறிக்கப்பட்டதை "இந்நாட்டின் வரலாற்றிலேயே மிக இருண்ட பக்கம்" என்று குறிப்பிட்டிருந்தனர்.

நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் உள்ள மோரி (Moree) நகரில் 1943-ஆம் ஆண்டு ஜனவரி 5-ஆம் திகதிபிறந்த மேரி காட்ரான், ஆண்கள் மட்டுமே ஆதிக்கம் செலுத்திய சட்டத்துறையில் தடம் பதித்துச் சாதனைகளைப் படைத்தார்.

# சர்வதேச மாணவரைக் கொன்ற இந்தியருக்கு 27 ஆண்டுகள் சிறை



ஆஸ்திரேலியாவில் சர்வதேச மாணவரைக் குத்திக் கொன்ற வழக்கிலும், மற்றொருவரைப் படுகாயப்படுத்திய வழக்கிலும் 30 வயதான இந்திய வம்சாவளி இளைஞருக்கு 27 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதுடன், சிறைக் காலத்திற்குப் பிறகு அவர் இந்தியாவுக்கு நாடு கடத்தப்படும் நிலையை எதிர்கொண்டுள்ளார்.

மெல்போர்ன் ஓர்மண்ட் (Ormond) பகுதியில் கடந்த 2024 மே மாதம், மது அருந்தும்போது ஏற்பட்ட தகராறில், 22 வயதான நவ்ஜீத் சிங் சிந்துவைக் கத்தியால் குத்திக் கொன்றதாகவும், 30 வயதான சர்வன் சிங் என்பவரைப் படுகாயப் படுத்தியதாகவும் குற்றஞ்சாட்டப்பட்ட ரோபின் ரோபின் (Robin Robin) என்பவருக்கே விக்டோரியா உச்ச நீதிமன்றம் இத்தண்டனையை விதித்தது.

ரோபின் தான் தற்காப்புக்காகவே இச்செயலைச் செய்ததாக நீதிமன்றத்தில் வாதிட்டபோதிலும், நடுவர் மன்றம் (Jury) அவரை குற்றவாளியாக அறிவித்தது.

இதனைத் தொடர்ந்து அவருக்கு 27 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன், குறைந்த பட்சம் 20 ஆண்டுகள் வரை பிணை பெற முடியாத தண்டனைக் காலத்தையும் நீதிமன்றம் நிர்ணயித்துள்ளது.

ரோபின் தனது சகோதரர் புதிய கார் வாங்கியதை நண்பர்களுடன் மது அருந்திக் கொண்டாடியபோது இச்சம்பவம் நடந்துள்ளது.

அங்கிருந்த சர்வன் சிங் சொல்லாமல் கிளம்பி நவ்ஜீத்தின் வீட்டிற்குச் சென்றதால் ஆத்திரமடைந்த ரோபின், அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு திட்டி மீண்டும் வருமாறு அழைத்துள்ளார்.

சர்வன் தனது பொருட்களை எடுக்க நவ்ஜீத்துடன் வந்தபோது, ரோபின் கத்தியால் தாக்குதல் நடத்தியுள்ளார்.

இதன்போது நண்பனைக் காப்பாற்ற முயன்ற நவ்ஜீத்தையும் அவர் சரமாரியாகக் குத்தியதில் நவ்ஜீத் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இத்தாக்குதல் எவ்விதக் காரணமுமின்றி நடத்தப்பட்ட ஒன்று என்றும், குற்றவாளிக்குத் தனது செயலுக்காக எந்தவொரு உண்மையான மனவருத்தமும் இல்லை என்றும் நீதிபதி ஆண்ட்ரூ டின்னே (Andrew Tinney) சுட்டிக்காட்டினார்.

தற்போது இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகச் சிறையில் இருக்கும் ரோபின், தனது தண்டனைக் காலத்தை நிறைவு செய்த பின்னர் ஆஸ்திரேலியாவில் இருந்து இந்தியாவுக்கு நாடு கடத்தப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சீன உளவாளியான சிட்னி தொழிலதிபருக்கு சிறை



சீன உளவு அமைப்பைச் சேர்ந்தவர்கள் என சந்தேகிக்கப்படும் நபர்களுக்கு அறிக்கைகளைத் தயாரித்து வழங்கிய குற்றத்திற்காக, சிட்னியைச் சேர்ந்த தொழிலதிபர் அலெக்சாண்டர் செர்கோவிற்கு (Alexander Csergo) மூன்றரை வருடங்கள் சிறைத்தண்டனை விதித்து ஆஸ்திரேலிய நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கவனக்குறைவான வெளிநாட்டு தலையீட்டுக் குற்றச்சாட்டின் (reckless foreign interference) கீழ் ஆஸ்திரேலியாவில் நபர் ஒருவருக்கு தண்டனை வழங்கப்படுவது இதுவே முதல்முறையாகும்.

எனினும், ஏற்கனவே சிறையில் கழித்த காலத்தைக் கருத்தில் கொண்டு, அடுத்த மாதமே அவர் பிணையில் விடுவிக்கப்பட வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

58 வயதான செர்கோ, ஷாங்காயில் பணியாற்றிய போது 'கென்' (Ken) மற்றும் 'எவ்லின்' (Evelyn) ஆகிய இரு நபர்களுடன் தொடர்பு வைத்திருந்தார்.

பணம் பெற்றுக்கொண்டு லித்தியம் சுரங்கம், ஜெர்மன் அரசாங்கத்தின் மாற்றம், பாதுகாப்பு, 'குவாட்' (Quad) கூட்டணி மற்றும் 'அக்கஸ்' (AUKUS) ஒப்பந்தம் உள்ளிட்ட தலைப்புகளில் அறிக்கைகளைத் தயாரித்து வழங்கியுள்ளார்.

அவர்கள் சீன உளவு அமைப்பான 'மாநில பாதுகாப்பு அமைச்சகத்திற்காக' (MSS) பணியாற்றுகிறார்கள் என்பதை அறிந்திருந்தும், தனது செயல் வெளிநாட்டு உளவு நடவடிக்கைகளுக்கு பயன்படும் என்பதை உணராமல் அவர் கவனக்குறைவாகச் செயல்பட்டுள்ளார் என அரசுத்தரப்பு வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தில் வாதிட்டனர்.

எனினும், பகிரங்கமாகக் கிடைக்கக்கூடிய தகவல்கள் மற்றும் போலி நேர்காணல்களைக் கொண்டே அறிக்கைகள் தயாரிக்கப்பட்டதாகவும், நாட்டின் பாதுகாப்பு ரகசியங்கள் எதுவும் வெளிப்படுத்தப்படவில்லை என்றும் செர்கோவின் வழக்கறிஞர்கள் தெரிவித்தனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி கிரேக் ஸ்மித், மே அல்லது ஜூன் 2022 முதல் டிசம்பர் 2022 வரையிலான காலப்பகுதியில் செர்கோ கவனக்குறைவாகவும் ஏமாற்றும் வகையிலும் செயல்பட்டுள்ளது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

முன்னதாக சிறையில் கழித்த 600க்கும் மேற்பட்ட நாட்களைக் கணக்கில் கொண்டு, செர்கோவிற்கு 3 ஆண்டுகள் மற்றும் 6 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இதன்படி, எதிர்வரும் ஒக்ரோபர் 24, 2026 அன்று அவர் பிணையில் செல்லத் தகுதி பெறுவார் என நீதிபதி அறிவித்தார்.





# எதிர்ப்பக்கம்

### உருவு கண்டு எள்ளாமை வேண்டும்

நான் இப்பொழுது எண்ணிப் பார்க்கும்போது சிறுவயதில் பள்ளியில் படிக்கும் காலத்திலும் , நமது குடும்ப சூழ்நிலையிலும் எத்துணை பேர்களை body shaming எனப்படும் மற்றொருவரின் உருவம் மற்றும் உடல் அமைப்பினை கேலி செய்திருக்கிறேன் /றோம் என்பது புரிகின்றது. ஏனென்றால் ஒருவரின் உடல் அமைப்பினை வைத்து அவரை எள்ளுவது நமது சமூக அமைப்பில் இயல்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விஷயமாக இருக்கிறது. எத்தனையோ பேரினை யானை, எருமை மற்றும் காக்கை ( கருமை நிறத்தினவரை) கேலி செய்வது ,அவரை ஒதுக்குவது என்றெல்லாம் பார்த்து தானே நாம் வளர்ந்திருக்கிறோம். சமீபத்தில் நான் பார்த்த 'Babitha Singh Reporting' என்ற படத்தில் மிக அற்புதமாக நிமிஷா சஜயன் நடித்திருக்கிறார். அவர் ஏற்கனவே 'The Great Indian Kitchen' என்ற படத்தில் மிகச் சிறப்பாக நடித்த பல விருதுகளை வாங்கியிருப்பது நாம் அறிந்ததே.

இந்தப் படத்தில் தைரொய்ட் குறைபாட்டினால் குண்டான கதாபாத்திரத்தில் மிகச்சிறப்பாக நடித்திருக்கிறார். படம் முழுவதிலும் அவரின் உருவத்தினை வைத்து அவரை மட்டம் தட்டுகின்றனர். தந்தை பணியின் போது அகால மரணமடைந்ததால், கருணையின் படி அவருக்கு காவலர் பதவி கிடைக்கிறது. அதைக் குத்திக் காட்டியே அவரைக் கேலி செய்கின்றனர். படத்தில் ஒரே ஒரு கதாபாத்திரம் தான் அவரின் மேல் அன்பு கொண்டிருக்கிறது. அவர் கொலை செய்யப்பட்டதை அறிந்து , அதற்கு காரணமானவர்களை தேடி அலைகின்றார். நிமிஷா படம் முழுவதிலும் பபிதா சிங் கதாபாத்திரத்தில் ஒன்றி நடித்திருக்கிறார். அதுவும் இறுதிக்காட்சியில் தன் நண்பனைக் காப்பாற்ற முடியவில்லையே என்று கையறு நிலையில் அவர் அழுது கண்ணீர் விடும் காட்சி நம்மை உருக்கிவிடும். கதை மிக சாதாரணமாக இருந்தாலும் மொத்த படத்தையும் நிமிஷா தன் தோள்களில் தாங்கி சென்றிருக்கிறார். ஆனால் இதற்கெல்லாம் தேசிய விருது கொடுக்காமல் கேடுகெட்ட படங்களுக்கு கொடுத்து நமது மானத்தை வாங்குவது தானே இந்த விருது அணியினருக்கு வேலை. ஆதலால் பெரிதும் எதிர்பார்க்காமல் இருப்பதே நல்லது

### நீண்ட காலம் மறக்காமல் இருக்க என்ன செய்வது

சமீபத்தில் எனது ஆதர்சமான இயற்பியலாளர் ரிச்சர்ட் ஃபெய்ன்மேன் ஒரு பேட்டியை யூரியூப் தளத்தில் கண்டேன். அவரின் ஒவ்வொரு உரையாடலும் யோசிக்க வைத்துவிடும் .அதைப்போலவே இந்த உரையாடலிலும் நாம் எவ்வாறு நாம் படித்த பாடங்களை மறக்காமல் நினைவில் வைத்திருக்க என்ன வழி என்று சொல்கிறார். அவரது கல்லூரிக்காலத்தில் வகுப்புத் தோழர்கள் தேர்வுகளுக்கு முன்பு இரவு முழுவதும் மனப்பாடம் செய்தனர். கணித சூத்திரங்கள் 'மறந்து விடாமல் இருக்க' அவர்கள் கடுமையாக முயற்சி செய்தனர் . அதாவது ஒரு போரிற்கு செல்லும் வீரனைப் போன்று தொடர்ந்து பயிற்சி செய்தனர். எவ்வாறு தனது நண்பன் ஒருவன் படித்த அனைத்தும் வெறுமனே மனப்பாடம் செய்த காரணத்தினால் தேர்வின் பொழுது மறந்து போய் தேர்வில் தோற்றுப் போனான் என்று நினைவு கூருகிறார். தான் எவ்வாறு படித்த விஷயங்களை நினைவு கூர்வதற்கு ஒரு மாற்றுப் பாதையைத் தேர்ந்தெடுத்தார் என்றும் சொல்கிறார். அவர் வெறுமனே மனப்பாடம் செய்வதை மறுத்து, அதற்கு பதிலாக கருத்துக்கள் எங்கிருந்து வந்தன என்பதைத் துல்லியமாகப் புரிந்துகொள்வதில் தனது நேரத்தினை பெரும்பாலும் செலவிட்டிருக்கிறார். உதாரணமாக, மக்ஸ்வெல் சமன்பாடுகளைக் கற்கும் போது, அதன் மூலத்தைக் கண்டறிய ஒரு சமன்பாட்டை வருவிப்பதற்காக அவர் ஒரு மாலை முழுவதையும் செலவிட்டார், அதே நேரத்தில் அவரது அறைத் தோழர் நான்கு சமன்பாடுகளையும் விரைவாக மனப்பாடம் செய்தார் ( நம்மவர்களைப் போன்று )

உண்மையான நமது நினைவுப்பெட்டகம் என்பது ஒரு கோப்புகளை நிறைத்து வைத்துக்கொண்டு நாம் வேண்டிய நேரம் திறந்து எடுக்கும் அலுமாரி போன்றது அல்ல என்று ஃபெய்ன்மேன் கூறுகிறார். மாறாக நமது மூளையில் நினைவுகள் சேகரம் என்பது ஒரு மறுகட்டமைப்புச் செயல்முறையாகும்.அதாவது ஒவ்வொரு முறை நாம் நினைவில் சேகரிக்கும் போது நமக்கு தெரிந்த மற்ற தகவல்களுடன் சேர்த்து தொடர்பு படுத்தி ஒரு மறுகட்டமைப்பு செய்யாவிட்டால் நாம் எளிதில் மறந்துவிடுவோம். ஒரு நண்பரின் வீட்டிற்குச் செல்லும்போது, நாம் செல்லும் வழியினை மனப்பாடம் செய்வதில்லை .(அதாவது 200 மீற்றர் தாண்டியவுடன் வலது , பிறகு 1 கிலோமீற்றர் சென்ற பிறகு திரும்புவது என்றெல்லாம் நாம் நினைவில் வைத்துக்கொள்வதில்லை). அதற்கு மாறாக ஒரு பெரிய தென்னை மரத்தினை தாண்டியவுடன் இடது பக்கம் திரும்பவேண்டும் அல்லது ஒரு மஞ்சள் வீடு போன்ற அடையாளங்களைப் பயன்படுத்தி வழியை நாம் நம் நினைவில் பதிந்துகொள்வதால் என்றும் மறப்பதில்லை.இதேபோல் காபி தயாரிப்பது என்பதையும் நாம் மனப்பாடம் செய்வதில்லை. ஏனென்றால் நமக்கு தெரியும் சூடான நீரையும் காபி தூளையும் மற்றும் சர்க்கரையும் கலந்தால் காபி என்ற எளிய விதியினை நாம் புரிந்துகொள்வதை சார்ந்துள்ளது. புரிந்துகொள்ளுதல் என்பது மிக இலகுவானது என்பதால் காபி கோப்பை இல்லாதபோது ஒரு குவளையைப் பயன்படுத்துவது போன்ற சிறிய மாற்றங்களுக்கு இந்த விதி நம்மை அனுமதிக்கிறது, அதேசமயம் எந்த விஷயத்தையும் நாம் மனப்பாடம் செய்யும்போது அது மிகப் பலவீனமாகவும், கடினமானதாகவும் ஆகி விடுகிறது என்கிறார்

இறுதியாக, புரிதல் என்பது வாழ்நாள் முழுவதும் மறக்கும் மற்றும் மீண்டும் உருவாக்கும் ஒரு தொடர்ந்து நடக்கும் வேடிக்கையான செயல்முறை என்று ஃபெய்ன்மேன் நம்பினார். அவர் அறிவுக்கும் ஞானத்திற்கும் இடையிலான வேறுபாடு என்ன என்பதைத் தெளிவாகச் சொல்லுகிறார் .அறிவு என்பது குஸ்ரீஅய போன்ற ஒரு சூத்திரத்தை நினைவில் கொள்வது மட்டுமே, அதேசமயம் ஞானம் என்பது ஊஞ்சலில் ஆடும் ஒரு குழந்தையைப் பார்த்து, அதிர்வு மற்றும் ஆற்றல் பரிமாற்றத்தின் இயற்பியலை உண்மையாக எவ்வாறு F=ma செயலாற்றுகிறது என்பதை புரிந்துகொள்வதாகும் . ஊஞ்சலில் வேகத்தைக் குறைத்தால் என்னவாகும் , நிறுத்திவிட்டு மறுபடியும் ஊஞ்சலைத் தள்ளினால் என்னவாகும், ஏன் என்று பல கேள்விகளை நமக்குள்ளே கேட்டுக்கொண்டு ,அதன்விளைவாக ஏற்படும் சிந்தனைகளின் அடிப்படையிலிருந்து நமது ஞானத்தினை உருவாக்குவதன் மூலம், நாம் சிந்திக்கும் விதத்தின் இழைகளில் அந்த எண்ணங்களைப் பின்னிப் பிணைத்து அவற்றை மறக்க முடியாததாக ஆக்குகிறோம்.

இப்பொழுது தெரிகிறதா நாம் எப்படி படிக்கவேண்டும் என்று.சும்மாவா சொன்னார்கள் நமது முன்னோர்கள் , "அகல உழுவதை விட ஆழ உழவேண்டும்" என்று.

### மனிதனுக்கு நிகராகுமா இயந்திரங்கள் ?

AGI (Artificial General Intelligence) எனப்படும் செயற்கை பொது நுண்ணறிவு இயந்திரம் அல்லது மாதிரி (model) கண்டுபிடிப்பதில் ஏறக்குறைய எல்லாப் பெரிய நிறுவனங்களும் தொடர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றன. அதாவது கூகிள், அமேசான், மைக்ரோசொப்ட்,மெட்டா மற்றும் ஆந்த்ரோபிக் போன்ற நிறுவனங்கள் பல நூறு மில்லியன் டொலரை செலவு செய்து இந்த AGI மாதிரியினை எப்படியாவது கண்டுபிடித்துவிடுவோம் என்று கங்கணம் கட்டிக்கொண்டு போட்டியாக ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கின்றனர். உண்மையில் செயற்கைப் பொது நுண்ணறிவு என்பது என்ன ? இப்பொழுதுள்ள LLM ( large language models) எனப்படும் பெரிய மொழி மாதிரிகள் ஓரளவுக்கு மனிதனைப் போன்று செயற்கையாக கட்டுரைகள், பத்திகள் , கணினி நிரல்கள், பேசுவது, படம் வரைவது போன்ற எளிய விஷயங்களை திறமையாகச் செய்துவிடுகின்றன. ஆனால் சுநயளழுெைபெ எனப்படும் பகுத்தறிவு அல்லது தர்க்கத்துக்கு உள்ளே வினையாற்றுவது என்பது கேள்விக்குறியே. மனிதனைப் போன்று இந்த மாதிரிகளை பகுத்தறிவு கொண்டு செயல்படும் மாதிரிகளாக உருவாக்குவதே AGI எனும் தொழில்நுட்பத்தின் நோக்கமாகும். ஆனால் அவர்களுக்குத் தெரியாது தமிழ்நாட்டில் பகுத்தறிவு என்றால் கிலோ என்ன விலை என்று கேட்கும் கழகக் கண்மணிகள் இருக்கிறார்கள் என்று .

இது சம்பந்தமான ஒரு அற்புதமான உரையாடலை அண்மையில் கேட்டேன் . அதாவது இந்தத் துறையில் கடந்து 30 வருடங்களாக ஆராய்ச்சி செய்து வரும் Zoubin Ghahramani யின் பேட்டியினைக் கேட்டேன். அற்புதம் என்றே சொல்லவேண்டும். ஒருவரை 'புத்திசாலி' என்று எது தீர்மானிக்கிறது என்று நான் எப்போதும் யோசிப்பதுண்டு. அவர்கள் பணம் சம்பாதிப்பதில் புத்திசாலிகளாக இருப்பதாலா அல்லது புத்திசாலித்தனமான முடிவுகளை எடுப்பதில் புத்திசாலிகளாக இருப்பதாலா? அது பிந்தையதுதான் என்று நான் நம்புகிறேன்.

உங்களுக்குத் தெரியாத நிச்சயமற்ற சூழ்நிலைகளை நீங்கள் எதிர்கொள்ளாதபோது, எப்படிச் சிறந்த முடிவுகளை எடுப்பீர்கள்? நீங்கள் நம்பும் உண்மைகளின் (நம்பிக்கைகளின்) அடிப்படையில் முடிவுகளை எடுக்கிறீர்கள் சில நிகழ்தகவுகளுக்குப் பிறகு, நீங்கள் ஆம் / இல்லை என்ற முடிவுகளுக்கு வருவீர்கள். ஆம் / இல்லை என்பது போன்ற சிறந்த முடிவுகளை எடுப்பதில் மிகவும் திறமையான ஒருவர் தான், புத்திசாலி நபராகவோ அல்லது சிறந்த தலைவராகவோ சிறந்து விளங்குவார்.

பல விஷயங்களைச் செய்யக்கூடிய பெரிய மொழி மாதிரிகளை (LLM ) நாம் உருவாக்குகிறோம், ஆனால் சிறந்த முடிவுகளை எடுக்கும் விஷயத்தில், அந்த மாதிரிகள் மிகவும் பின்தங்கியுள்ளன. தவறான முடிவுகளை எடுப்பதில் அவை மிகவும் நம்பிக்கையுடன் செயற்படுகின்றன. அந்த வெற்றிடத்தை நிரப்பத்தான் ஏஜிஐ (AGI) பயன்பாட்டிற்கு வருகிறது. மேலும் மேலும் தரவுகளைச் சேர்ப்பதன் மூலம் உங்களால் புத்திசாலித்தனமான அமைப்புகளை உருவாக்க முடியாது மனிதர்கள் எதிர்கொள்ளும் பகைமை, பணிவு, நேர்மை மற்றும் சுய சந்தேகம் போன்ற நிச்சயமற்ற தன்மைகளுக்கு அவை உட்படுத்தப்பட வேண்டும்.ஸூபின் கஹ்ரமானி அவர்களின் நிச்சயமற்ற தன்மையின் கணிதம் பற்றிய இந்த சுவாரஸ்யமான உரையாடலில் அவர், துல்லியம் மற்றும் நம்பகத்தன்மை, பேய்சியன் சிந்தனை, ஆற்றல் செயல்திறனின் தேவை (உதாரணமாக, மனித மூளை 20 வாட்ஸூக்கும் குறைவான ஆற்றலைப் பயன்படுத்தி அற்புதங்களைச் செய்வது அதிக ஆற்றலைப் பயன்படுத்தும் பெரிய மொடல்கள் டோக்கன்களை காலி செய்வது ), மற்றும் ஏஜிஐ-யில் (AGI) எதிர்கால ஆராய்ச்சி ஆகியவை பற்றிப் பேசுகிறார்.

இது ஒரு சுவாரஷ்யமான உரை. தயவுசெய்து இதைப் பாருங்கள், இதற்காக 45 நிமிடங்கள் செலவழித்ததற்கு நீங்கள் வருத்தப்பட மாட்டீர்கள். கண்ட கண்ட கூத்தாடிகளின் மலின இன்ஸ்டா ரீல்ஸ்களில் நீங்கள் விரயம் செய்யும் நேரத்தினை விட மிகக் குறைவாகவே எடுக்கும். ஆனால் கண்டிப்பாக உங்களை யோசிக்க வைப்பார். கண்டிப்பாகப் பாருங்கள்.

### விஜய் ஆட்சியில் லஞ்ச ஒழிப்பு நடவடிக்கைகள்: ஒரு புதிய பார்வை

தமிழ்நாட்டின் தற்போதைய த.வெ.க. ஆட்சியில் லஞ்ச ஒழிப்பு மற்றும் நேர்மையான நிர்வாகத்தை நோக்கி பல்வேறு காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது பற்றிய செய்திகளை தொடர்ந்து படிக்க முடிகிறது . முதலமைச்சர் விஜய் தனது முதல் சுதந்திர தின உரையில், "லஞ்சம் மற்றும் ஊழலற்ற தமிழகத்தை உருவாக்குவதுதான் உண்மையான சுதந்திரம்" என்று முழங்கியது ஒட்டுமொத்த மக்கள் மத்தியிலும் பெரும் கவனத்தையும் வரவேற்பையும் பெற்றுள்ளது. அரசு இயந்திரத்தில் புரையோடிப் போயிருந்த ஊழல் முறைகேடுகளைத் தடுத்து, நிர்வாகத்தில் நேர்மையைக் கொண்டுவர முதல்வர் விஜய் மற்றும் அவரது அமைச்சர்கள் எடுத்துவரும் முக்கியமான முன்னெடுப்புகள் குறித்த ஒரு விரிவான அலசல்.



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

### வீட்டுவசதித் துறையில் ஆயிரம் கோடி லஞ்சத் தடுப்பு

மிகப்பெரிய பணப்புழக்கமும் லஞ்சப் புகார்களும் அதிகம் கொண்ட வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையில் (DTCP & CMDA) முந்தைய ஆட்சிக்காலங்களில் திட்ட 'அப்ரூவல்' வழங்குவதற்காக ஆண்டுக்கு சுமார் 1,000 கோடி ரூபாய் வரை முதல்வருக்கு மட்டுமே லஞ்சமாகச் சென்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதாவது, DTCP மற்றும் CMDA அப்ரூவல்களுக்கு தலா 500 கோடி ரூபாய் வீதம் லஞ்சமாகப் பெறப்பட்டு வந்தது. ஆனால், விஜய் பதவியேற்ற அடுத்த நாளே, வீட்டுவசதித் துறை செயலாளர் வழியாக அந்த லஞ்சத் தொகை தனக்கு வேண்டாம் என்று திட்டவட்டமாக மறுத்துவிட்டார். இந்தத் தகவலை உயர் அதிகாரி ஒருவர் வாயிலாகவும், சென்னையின் பிரபல 'ஜி ஸ்கொயர்' ரியல் எஸ்டேட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் பால ராமஜெயம் வெளியிட்ட காணொளி வாயிலாகவும் அறிய முடிகிறது. இதன் மூலம், ஆட்சிப் பொறுப்பின் உச்சபட்ச மட்டத்திலேயே லஞ்ச ஒழிப்புப் பணி மிகத் துணிச்சலாகத் தொடங்கப்பட்டுள்ளது என்பது ஒரு நல்ல செய்தி . கழக கொத்துஸ்கள் இதற்கும் எதாவது மிக மலினமான ரீல்ஸ் செய்து தங்களது தளத்தில் பதிவிடுவார்கள் என்பது நிச்சயம்.

மின்சாரத் துறையில் நிலவிய பல்வேறு ஊழல்கள் தற்போது முற்றிலும் தவிர்க்கப்பட்டு வருகின்றன. மின் துறை அமைச்சர் சி.டி.நிர்மல் குமார் மின்சார துறைப் பற்றிய வெள்ளை அறிக்கை ஒன்றை வெளியிட்டு, நேர்மையான நிர்வாகத்திற்குச் சான்றாக விளங்குகிறார். இதற்கு முன்னதாக, மின் வாரியப் பொறியாளர்கள் தங்களுக்கு விருப்பமான இடத்திற்கு மாறுதல் பெற அமைச்சருக்கு 5 முதல் 10 லட்சம் ரூபாய் வரை லஞ்சம் கொடுக்க வேண்டியிருந்தது. ஆனால், தற்போது லஞ்சம் வாங்காமல், தகுதி மற்றும் பணி மூப்பு (Merit and seniority) அடிப்படையில் மட்டுமே நேர்மையாக இடமாறுதல்களும் பதவி உயர்வுகளும் வழங்கப்படுகின்றன. மேலும், புதிய சூரிய சக்தி மின் உற்பத்தியாளர்கள் இணைப்பு பெற மெகாவாட்டுக்கு 25 லட்சம் ரூபாய் (10 மெகாவாட்டுக்கு 2.5 கோடி ரூபாய்) வரை அமைச்சர்களாக இருந்த செந்தில் பாலாஜி மற்றும் முத்துசாமி காலத்தில் லஞ்சமாகக் கொடுக்க வேண்டியிருந்த 'கட்டண முறையை' நிர்மல் குமார் முற்றிலும் ஒழித்துள்ளார். நாமக்கல் மண்டலத்தில் லஞ்சப் புகாரில் சிக்கிய மூத்த அதிகாரிகளை அமைச்சர் நேரில் சென்று எச்சரித்த சம்பவமும் அதிகாரிகளிடையே பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

கல் குவாரி உரிமையாளர்கள் தங்களது உரிமங்கள் மற்றும் தடையின்மை சான்றிதழ்களைப் பெற மாதம் 5 முதல் 6 லட்சம் ரூபாய் வரை அதிகாரிகளுக்கு லஞ்சமாகக் கொடுத்து வந்த நிலை மாறி, தற்போது ஒரு ரூபாய் கூட கொடுக்கத் தேவையில்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், அரசு விதிமுறைகளை மீறிச் செயற்பட்ட சட்டவிரோத குவாரிகளையும் இந்த அரசு உறுதியாக மூடச் செய்துள்ளது. அதேபோல, பள்ளி கல்வித்துறையிலும் வரலாற்று ரீதியான லஞ்ச நடைமுறைகள் முறியடிக்கப்பட்டுள்ளன. முன்பு புதிய 'சி.பி.எஸ்.இ.' பள்ளிகள் தொடங்குவதற்கான தடையின்மை சான்றிதழ் (NOC) பெற 25 முதல் 40 லட்சம் வரையும், ஆண்டு அங்கீகாரத்தைப் புதுப்பிக்க 3 முதல் 10 லட்சம் வரையும் இடைத்தரகர்கள் மூலம் கட்டாய வசூல் செய்யப்பட்டு வந்தது. இதனை முற்றிலும் மாற்றியமைத்துள்ள பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன், இனி இந்தச் சான்றிதழ்களைப் பெற ஒரு ரூபாய் கூட லஞ்சம் கொடுக்கத் தேவையில்லை என உறுதியளித்துள்ளார். டாஸ்மாக் மதுபான தயாரிப்பு நிறுவனங்கள் முந்தைய ஆட்சியாளர்களுக்கு மாதம் 51 கோடி ரூபாய்க்கும் மேல் கமிஷனாக வழங்கி வந்தன. முதல்வர் விஜய் இந்த முறைகேட்டைத் தடுத்து, அந்தக் கமிஷன் தொகையை வரியாக மாற்றி அரசு கஜானாவிற்குச் செலுத்த உத்தரவிட்டுள்ளார். இதன் மூலம் பீர் பெட்டிக்கு 40 ரூபாயும், மதுபான பெட்டிக்கு 90 ரூபாயும் அரசுக்குக் கூடுதல் கட்டணமாகவும் வருவாயாகவும் நேரடியாகக் கிடைக்கிறது.

அமைச்சர்கள் மட்டத்தில் லஞ்சம் ஒழிக்கப்பட்டுவிட்டாலும், கீழ் மட்டங்களில் லஞ்சம் இன்னும் முழுமையாக ஒழியவில்லை. எனினும், தொடர்ந்து நடைபெறும் லஞ்ச ஒழிப்பு சோதனைகள் மற்றும் கைதுகள் காரணமாக கீழ்மட்ட ஊழியர்கள் மத்தியில் லஞ்சம் வாங்க ஒருவித அச்சம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறாக, தமிழ்நாட்டின் நிர்வாகக் கட்டமைப்பில் ஒரு நேர்மையான, வெளிப்படையான மாற்றத்திற்கான வலுவான அடித்தளத்தை முதலமைச்சர் விஜய் தலைமையிலான அரசு அமைத்துள்ளது.

ஆனால் இந்த நல்ல மாற்றங்கள் எவ்வளவு நாட்களுக்கு தொடர்ந்து தாக்குப்பிடிக்கும் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் முந்தைய கழக ஆட்சிக்காலத்தில் லஞ்ச, லாவண்யத்தில் புரையோடிய அதிகாரிகளும், அவர்களுக்கு துணை போன கேடுகெட்ட மனிதர்களும் இந்த அமைப்பில் இருக்கும்வரை லஞ்சம் ஒழியுமா என்பது சந்தேகமே.

# மாத ராசிபலன்



## மேடம்

இம்மாதம் தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல வளர்ச்சியைக் காண்பீர்கள். நிலுவையில் இருந்த பணிகள் விரைந்து முடியும். பொருளாதார நிலை சீராக இருக்கும் எதிர்பாராத பணவரவு உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுகள் சுமுகமாக முடியும். கணவன்-மனைவி இடையே புரிந்துணர்வு அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்குப் பதவி உயர்வு அல்லது புதிய பொறுப்புகள் கிடைக்க வாய்ப்புள்ளது. ஆரோக்கியத்தில் சிறு சிறு உபாதைகள் தோன்றி மறையும் என்பதால் கவனமாக இருக்கவும். மாணவர்களுக்குக் கல்வியில் கூடுதல் முயற்சி அவசியம்.

## இடபம்

ரிஷப ராசியினருக்கு இந்த மாதம் நேர்மறையான மாற்றங்கள் நிகழும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த காரியங்கள் வெற்றிகரமாக நிறைவேறும். நிதி நிலைமை சிறப்பாக இருக்கும் சேமிப்பு அதிகரிக்கும். நிலம், வாகனம் தொடர்பான சேர்க்கை உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் அமைதியும் நிலவும். தொழில் ரீதியாக புதிய வாய்ப்புகள் தேடி வரும். கூட்டு வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைத்துப் பாராட்டுகளைப் பெறுவீர்கள்.

## மிதுனம்

இம்மாதம் உங்களுக்குச் சவால்களும் நன்மைகளும் கலந்த மாதமாக இருக்கும். தொழிலில் புதிய திட்டங்களைச் செயற்படுத்தும்போது கூடுதல் கவனம் தேவை. நிதி விஷயங்களில் எச்சரிக்கையாக இருக்கவும் செலவுகளைக் கட்டுப்படுத்துவது நல்லது. உத்தியோகத்தில் பணிச்சுமை அதிகரிக்கலாம், ஆனால் உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். குடும்பத்தினருடன் பேசி முடிவெடுப்பது சிக்கல்களைத் தவிர்க்கும். உறவினர்களிடம் வீண் வாக்குவாதங்களைத் தவிர்க்கவும். கலைத்துறையினருக்குப் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். மாணவர்களுக்குப் படிப்பில் ஆர்வம் அதிகரிக்கும்.

## கடகம்

கடக ராசியினருக்கு இம்மாதம் அனுகூலமான பலன்கள் கிடைக்கும். பொருளாதாரத்தில் சிறப்பான முன்னேற்றம் காணப்படும். தடைபட்ட காரியங்கள் அனைத்தும் சுமுகமாக முடிவடையும். புது வீடு கட்டுவது அல்லது வாங்குவது தொடர்பான முயற்சிகள் வெற்றியடையும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். கணவன்-மனைவி இடையே அன்பும் நெருக்கமும் அதிகரிக்கும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு விருப்பமான இடமாற்றம் அல்லது பதவி உயர்வு கிடைக்க வாய்ப்புள்ளது. ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## சிம்மம்

சிம்ம ராசியினருக்கு இந்த மாதம் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். எதையும் தைரியமாக எதிர்கொண்டு வெற்றி பெறுவீர்கள். தொழிலில் இருந்த போட்டிகள் விலகும். புதிய வியாபாரத் தொடர்புகள் மூலம் நல்ல லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் உங்களின் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும், புதிய பொறுப்புகள் வழங்கப்படும். பணவரவு தாராளமாக இருக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் திட்டமிட்டபடி நடக்கும். பிள்ளைகளின் சாதனைகள் மனதிற்கு மகிழ்ச்சி தரும். ஆரோக்கியத்தில் சிறு சோர்வு ஏற்படலாம், சரியான ஓய்வு அவசியம்.

## கன்னி

கன்னி ராசியினருக்கு இம்மாதம் புதிய வாய்ப்புகளும் வளர்ச்சியும் நிறைந்து காணப்படும். உழைப்புக்குச் சிறப்பான பலன் கிடைக்கும். பொருளாதார நிலைமை உயரும், கடன் பிரச்சினைகள் படிப்படியாகக் குறையும். புதிய சொத்துகள் வாங்கும் யோகம் உண்டாகும். குடும்ப உறவுகளிடையே புரிதல் அதிகரிக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு எதிர்பார்த்த பலன்கள் கிடைக்கும், உடன் பணிபுரிபவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட நல்ல லாபம் கிடைக்கும். மாணவர்களுக்குப் போட்டிகளிலும் தேர்வுகளிலும் வெற்றி கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படும்.

## துலாம்

துலாம் ராசியினருக்கு இந்த மாதம் யோகமான மாதமாக அமையும். தொட்டதெல்லாம் துலங்கும் நிலுவையில் இருந்த பணவரவு கைக்கு வந்து சேரும். தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய முதலீடுகளைச் செய்ய சாதகமான காலம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு ஊதிய உயர்வும், அதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் கைகூடி வரும் தம்பதிகளிடையே ஒற்றுமை பலப்படும். புதிய நண்பர்களின் சேர்க்கையால் நன்மைகள் நடக்கும். மாணவர்கள் கல்வியில் சாதனை படைப்பார்கள். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். வெளிநாடு செல்ல முயல்பவர்களுக்கு நல்ல செய்தி வந்து சேரும்.

## விருச்சிகம்

விருச்சிக ராசியினருக்கு இம்மாதம் சுமாரான பலன்களே கிடைக்கும் என்பதால் நிதானம் தேவை. தொழில் மற்றும் வியாபாரத்தில் யோசித்துச் செயற்படுவது நல்லது. பணக் கொடுக்கல் வாங்கலில் கவனமாக இருக்கவும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகமாக இருக்கும், சக ஊழியர்களிடம் அனுசரித்துச் செல்வது நல்லது. குடும்பத்தில் தேவையில்லாத வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது அவசியம் சரியான நேரத்திற்கு உணவு உட்கொள்ளவும். மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். எதிர்பார்த்த உதவிகள் சற்று தள்ளிப்போகலாம்.

## தனுசு

தனுசு ராசியினருக்கு இந்த மாதம் தொட்ட காரியங்கள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். நிதி நிலைமை மிகவும் சிறப்பாக இருக்கும். புதிய வருமான வழிகள் திறக்கும். வியாபாரத்தில் அதிக லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுகள் கிடைக்கும், புதிய பயணங்கள் மேற்கொள்ள வேண்டி வரும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் அமைதியும் நிலவும். நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். சுபகாரியப் பேச்சுகள் வெற்றிகரமாக முடியும். மாணவர்களின் கல்வித்திறன் அதிகரிக்கும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மகரம்

மகர ராசியினருக்கு இம்மாதம் சிறப்பான முன்னேற்றத்தை அள்ளித் தரும். தொழில் மற்றும் வியாபாரத்தில் இருந்த முடக்கங்கள் நீங்கி, புதிய வேகம் எடுக்கும். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு விரும்பிய மாற்றங்களும், ஊதிய உயர்வும் கிடைக்க வாய்ப்புள்ளது. குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் நீங்கி ஒற்றுமை பலப்படும். உறவினர்களின் வருகை மகிழ்ச்சி தரும். கணவன்-மனைவி இடையே புரிந்துணர்வு அதிகரிக்கும். மாணவர்களுக்குக் கல்வியில் நல்ல முன்னேற்றம் காணப்படும். உடல் ஆரோக்கியத்தில் இருந்த பிரச்சினைகள் விலகும்.

## கும்பம்

கும்ப ராசியினருக்கு இந்த மாதம் கலவையான பலன்கள் கிடைக்கும். வியாபாரத்தில் நிதானமான போக்கைக் கடைப்பிடிப்பது நல்லது் புதிய முதலீடுகளைத் தள்ளிப்போடவும். உத்தியோகஸ்தர்கள் தங்கள் வேலையில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். பண விஷயங்களில் எச்சரிக்கை தேவை. குடும்பத்தினருடன் நேரத்தைச் செலவழிப்பது மன அமைதியைத் தரும். ஆரோக்கியத்தில் சிறு உபாதைகள் தோன்றி மறையும், சரியான உணவு அவசியம். மாணவர்களுக்குப் படிப்பில் அதிக கவனம் தேவைப்படும். எதிர்பார்த்த சுபச்செய்திகள் வரச் சற்று தாமதமாகலாம்.

## மீனம்

மீன ராசியினருக்கு இந்த மாதம் அதிர்ஷ்டகரமான மாதமாக இருக்கும். அனைத்து காரியங்களிலும் வெற்றி உண்டாகும். பொருளாதார நிலை கணிசமாக உயரும். கடன் சுமைகள் குறையும். தொழிலில் புதிய வாய்ப்புகள் தேடி வரும், லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்குப் பதவி உயர்வு மற்றும் சம்பள உயர்வு கிடைக்க வாய்ப்புள்ளது. குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெறும். கணவன்-மனைவி இடையே அன்பும் சுமுக உறவும் நீடிக்கும். மாணவர்களுக்குக் கல்வியில் நினைத்த இலக்கை அடைய முடியும். ஆரோக்கியத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படும்.

# LACKMAA
Blinds & Curtains

YOUR DREAM HOME
IS WAITING

**0432-722-722**
**0403-793-893**
**1800-522-562**

18 Denali Drive,
Clyde North,Victoria 3978.

sales@lackmaablinds.com.au
www.lackmaablinds.com.au













PARBOILED RICE
புழுங்கல் அரிசி
ROSA KEKULU RICE
Muthu Sampa Rice
1kg
ATHAVAN
PRODUCTS
Ginger Powder
Roasted
Jaffna
CURRY POWDER
PREMIUM
MOONG DAL
(Roasted)
Soya Meat
CHILLI POWDER
EVERYTHING
YOU NEED
ALL IN ONE PLACE!
FAST
DELIVERY
THIS WAY UP
ஆதவன்
ATHAVAN
Cargo Service
Australia to
Sri Lanka
Sri Lanka to
Australia
BEST SERVICES:
Cargo & Shipping Services
Groceries & Household Items
Spices Export & Import
Pooja Products
Boutique Dress & Saree Collection
Contact Us For Details
Sri Ayyappa Pvt LTD
+61 449 722 392
40 David street, Dandenong VIC 3175, Australia
ஸ்ரீ AYYAPPA
ATHAVAN